# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, சித்திரை 18உ (30-4-72) ஞாயிறு 1391 ரபி அவ் 15 புத்தகம் 25 இதழ் 23


## குற்ற விசாரணை நீதிக்கமிஷன் சட்டம்:

# தமிழர் போராட்டத்தை நசுக்க கிடைத்துள்ள அரிய ஆயுதமாம்!

## தமிழ் கம்யூனிஸ்டுகளின் துரோகத்தனமான போக்கு!

கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடம் எதிர்ப்பதாக கூறும் குற்ற விசாரணைக்கமிஷன் மசோதாவை வட இலங்கையிலுள்ள தமிழ் கம்யூனிஸ்டுகள் சிலர் ஆதரித்து கருத்து தெரிவித்து வருகின்றனர். இதற்கு அவர்கள் காட்டும் காரணம் என்ன தெரியுமா? இப்படி ஒரு சட்டம் இருந்தால்தான் தமிழரின் போராட்டங்களை நசுக்க வாய்ப்பாக இருக்குமென்று இவர்கள் கூறித்திரிகிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் வடபகுதி அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் அவர்கள் இப்படி விளக்கம் கொடுத்துவருபவர்களில் ஒருவர் என்று அறியப்படுகிறது.

குற்ற விசாரணைக் கமிஷன் மசோதா மீது வோட்டெடுப்பு நடந்தபொழுது அதற்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவையும் எதிர்த்து வாக்களித்த எம். சி. சுப்பிரமணியம், எம். பி. மீது நடவடிக்கை எடுக்கும்படி வேண்டும் தீர்மானம் ஒன்று கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லூர்த்தொகுதி கிளையினால் சனிக்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இத்தீர்மானம் பின்வருமாறு:-

"மத்திய கமிட்டியின் கட்டுப்பாட்டைமீறி குற்ற விசாரணை நீதிக் கமிஷன் மசோதாவுக்கு ஆதரவாக வோட்டளித்த திரு. துடாவைமீது மத்திய கமிட்டி ஒழுங்கு நடவடிக்கைஎடுத்து வருகிறது. கட்சியின் அதே தீர்மானத்தைமீறி இம் மசோதாவுக்கு ஆதரவளித்தவரும், கட்சி அங்கத்தவர்களால் வேறு பல பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருபவருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் மீதும் ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்."

கட்சியின் மத்திய கமிட்டியிலோ அல்லது அரசியல் கமிட்டியிலோ அங்கம் வகிக்காத ஒரு அங்கத்தவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதை அவர் அங்கம் வகிக்கும் கட்சிக் கிளையே சிபாரிசு செய்தல் வேண்டும் என்னும்சட்ட விதிக்கமைய திரு. எம். சி. சுப்பிரமணியம் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் தொகுதிக் கிளை இன்னும் நடவடிக்கை எடுக்க முன் வராததால் நல்லூர்க் கிளை இவ்விடயத்தை ஆராய்ந்து மேற்படி முடிவை எடுத்தது.

ஆளும் கட்சியின் போக்கை விமரிசனம் செய்யும் அங்கத்தவர்கள், கட்சி அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் அவர்களால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு வருவதால் யாழ்ப்பாணம் தொகுதி கிளை உட்பட பல கிளைகள் ஜனநாயக ரீதியில் இயங்க முடிவதில்லை என்பதையும் நல்லூர் தொகுதி கிளை சுட்டிக்காட்டியிருக்கிறது.

இன்றைய அரசியல் நிலை பற்றியும் நல்லூர் தொகுதி கிளையின் தீர்மானம் பற்றியும் ஆராய்வதற்கு ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தை கட்சியின் வடபகுதி அமைப்பாளர் ஏ. வைத்திலிங்கம் கூட்டினார். திரு. எம். சி. சுப்பிரமணியம், வ. பொன்னம்பலம் இருவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இக் கூட்டத்தில் பேசிய ஒரு அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் கட்சியின் கொள்கைகளுக்கும், முடிவு

(7ம் பக்கம் பார்க்க)

## கல்வியமைச்சர் விஜயம் பகிஷ்கரிக்கப்படும்!

மே திங்கள் 11ம் திகதி கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் வடபகுதிக்கு விஜயம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறாரல்லவா? கல்வியமைச்சரின் இந்த விஜயத்தை தமிழரசுக்கட்சி முற்றாகப் பகிஷ்கரிக்கும் என்று தெரிகிறது.

கல்வியமைச்சரின் உத்தேச வடபகுதி விஜயத்தின்போது தமிழரசுக்கட்சி எப்படி நடந்து கொள்ளும் என்று கட்சியின் உயர்மட்டத் தலைவர் ஒருவரை சுதந்திரன் நிருபர் வினவியபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

"கல்வியமைச்சர் தமிழ் மக்களுக்கு பாரதூரமான தீங்குகள் பல இழைத்து வருவதால், அவரது வடபகுதி விஜயத்தை முற்றாகப் பகிஷ்கரிப்பது என்றும், கல்வியமைச்சருக்கு அளிக்கப்படும் வரவேற்புக்களில் தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு ஏற்கெனவே தீர்மானம் எடுத்துள்ளது. இத்தீர்மானத்தை மாற்றியமைக்கவோ, கைவிடவோ வேண்டிய அவசியம் ஏதும் இப்போது வந்து விடவில்லை."

அவர் தெரிவித்த மேற்படி கருத்திலிருந்து தமிழரசுக் கட்சி கல்வியமைச்சரின் வடபகுதி விஜயத்தை முற்றாகப் பகிஷ்கரிக்கும் என்று தெரிகிறது. அதே சமயத்தில் கல்வியமைச்சரின் வரவேற்பு வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாமென பொது மக்களையும் கட்சி கோரியுள்ளது.

## 'இனவிடுதலை பெற்றால் மட்டுமே தமிழ் தொழிலாளர்களுக்கு மீட்சி!'

### அடலேறுதரும் மே நாள் செய்தி

இந்நாட்டுத்தமிழ் தேசிய இனம் முதலில் விடுதலைபெற வேண்டும், அதன் பின்னரே வர்க்கபேதமற்ற தமிழர் சமுதாயத்தை உருவாக்க முடியும்; எனவே இன விடுதலைக்குப் போராட 'மே' நாளில் தமிழ் சமுதாயம் உறுதிபெறுத்துக்கொள்ள வேண்டும்—

—இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தொழிற்சங்கசெயலாளர் அடலேறு ஆலாலசுந்தரம் 'மே' நாளை யொட்டி விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்; அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"இந்நாட்டில் சமதர்ம சமத்துவ ஆட்சித் தமிழரசு ஒன்றை நிறுவுதலே தமிழ் தேசிய இனம் மீட்சி பெறவுள்ள ஒரே ஒரு மார்க்கமாகும்.

"இந்நாட்டின் வளத்துக்காக உழைத்து உழைத்து ஓடாகியிருக்கும் 15 இலட்சம் தமிழ்த்தோட்டத்தொழிலாளர்கள் அரசியல், குடியுரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அனாதைகளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

சிங்களமொழித் தேர்ச்சி பெறாத காரணத்துக்காக தமிழ்த்தொழிலாளர்கள், அரசாங்க வேலைகளிலிருந்தும் கூட்டுத்தாபனங்களி

(7-ம் பக்கம் பார்க்க)



## இன்று இ. தொ. கழக மாநாடு!

இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் 9வது வருடாந்த மாநாடு இன்று (30-4-72) காலை 9.30க்கு நுவரெலியா மாநகரசபை மண்டபத்தில நடைபெறுகிறது.

மாநாட்டை தமிழரசுத் தந்தை செல்வா தொடக்கி வைக்கிறார். இம்மாநாட்டில் மலையகத்தமிழர்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப் படவிருக்கிறது.

மாநாட்டில் அ. தங்கத்துரை, வி. தர்மலிங்கம் வி. என். நவரத்தினம் ஆகிய பா. உ.க்களும் நாவலர் அமிர்தலிங்கம், வழக்கறிஞர் பரராஜசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்துவர்.

## மிரட்டல்களுக்கு அஞ்சுவோர் தமிழரசுக்கட்சியினரல்ல!

### நிதியமைச்சருக்கு நாவலர் பதில்!

புதிய அரசியல் திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்று அராலி பிள்ளையார் கோவில் வீதியில் தமிழரசுக்கட்சியின் அராலி கிளையினரால் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. ந. சதாசிவம் அவர்களின் தலைமையின் கீழ் அண்மையில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் முன்னாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம், உடுவில் பா. உறுப்பினர் தருமலிங்கம், கோப்பாய் பா. உறுப்பினர் கதிரவேற்பிள்ளை ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள்.



வட்டூர் முன்னை நாள் பா. உ. நாவலர் அமிர்தலிங்கத்தின் உரைவருமாறு:-

அண்மையில் காரைநகரில் பேசிய நிதியமைச்சர் "தமிழரசுக் கட்சியினரின் சேஷ்டைகளுக்கு இடம் கொடுக்க [illegible] முழுபலத்தையும் பிரயோகிக்கும் என்று கூறியிருக்கின்றார்? இவரது மிரட்டலுக்கு நாம் பயப்படமாட்டோம். தமிழரசுக் கட்சிதான் இந்த அரசியல் திட்டத்தை எதிர்ப்பதாக கூறினார். தமிழ்பேசும் மக்கள் அரசியல் மண்டூகள் என்று நினைத்துதான் இப்படி கூறினார் போலும்.

'தமிழரசுக்கட்சி மட்டும் எதிர்க்கவில்லை, தமிழ் காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக்கழகம், அடங்கா தமிழர் கட்சி ஆகிய தமிழர் கட்சிகளும் சோஷலிச வாதிகளான பாலதம்பு, சண்முகதாசன், நீதியரசர் மாணிக்கவாசகர், கல்விமான் நேசையா

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




ஜெயன்,
மாதகல்.

கே: ஒருவரின் உண்மையான அன்பை, எப்படி அறியலாம்?

ப: நாம் இன்னலுக்காளாகும் போது!

கே: ஒரு மனிதனுக்கு இன முட் மொழியும் பெரிதா? அல்லது பதவியும், ஆசையும் பெரிதா?

ப: இனமும் மொழியுமே பெரிது!

கே: உண்மையான தமிழனை எதைக்கொண்டு அறியலாம்?

ப: அவன் பின்பற்றும் கொள்கையைக் கொண்டு!

ஃ

த: சிவஞானரஞ்சன்,
வண்ணை-நகர்,
யாழ்ப்பாணம்:

கே: புதிய சிங்கள அரசியல் திட்டத்தைப் பற்றி தமிழ் மக்களின் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் முன் வருமா?

ப: அப்படிச் செய்திட அரசுக்கு முதுகெலும்பு இல்லையே!

ஃ

அ: சந்திரதாஸ்,
கொழும்பு-11.

கே: மலையக மக்களுக்கு கிழக்குமாகாணத்தில் காணி கொடுப்பதாகவும், அங்கு வந்து குடியிருக்கும்படியும் மூதூர் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரிகையில் வெளியிட்டுள்ளாரே அது பற்றி யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்? தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி என்ன?

ப: அ: தங்கத்துரை, நா: உ: கிளிவெட்டி எனும் முகவரிக்கு எழுதுங்கள்!

ஃ

ஆனந்தன்,
பருத்தித்துறை,

கே: வெறும் தலைகளை மாத்திரம் எண்ணிவிட்டால் அது ஜனநாயகமாக முடியுமா?

ப: தலை எண்ணுவது ஜனநாயகமாகாது. ஆனால் அது தான் இந்நாட்டில் ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது.

கே: மும் மூர்த்திகளும் தற்போது என்னத்தை அழிக்க ஈடுபட்டுள்ளார்களோ?

ப: தங்களைத் தாங்களே அழிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்!

ஃ

இரா. ஆனந்தசிவம்,
அரிகிதோட்டம், சாமிமலை:

கே: 15 ம் நூற்றாண்டில் முதன் முதலாக 'நியூஸிலாந்து' தேசத்தை கண்டு பிடித்தவர்கள் இந்தியத் தமிழ் மாலுமிகள் என்று கூறுகிறார்களே இது சரியா?

ப: சரிதான்!

ஃ

கே: இராசதுரை,
கொழும்பு-13.

கே: பொறுமை யாருக்கு ஏற்படும்?

ப: அடுத்தவனுக்குள்ள திறமை தனக்கு இல்லையே என்றஏக்கம் ஒருவனுக்கு ஏற்படும்போது!

கே: என்னிடம் நெருங்கிப் பழகிக்கொண்டே என் நண்பன் ஒருவன் எனக்கு எதிராக பொறுமை பிடித்து சதிசெய்கிறான். இவனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்!

ப: உங்கள் நண்பரைப் போன்றவர்கள் சமுதாயத்தில் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்கள் நண்பர்கள் அல்ல; நண்பரைப்போல நடித்துக்கொண்டே நம்மை அறியாமல் நமது முதுகில் குத்துபவர்கள். இவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டம்! ஏனெனில் நமக்கு எதிராக நாம் சதி செய்வது நமக்கே தெரியாத மாதிரி இவர்கள் சூழ்ச்சி வலையைப் பின்னுவார்கள். இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டபின், அவர்களை விட்டுத் தூர விலகிவிட வேண்டும்: உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு நமக்கு எதற்கு?

கே: திமிர் தியாகராசாவுக்கு என்ன மந்திரி பதவி கிடைக்கும்?

ப: 'திட்ட' மந்திரி வேலை கிடைக்கலாம்— தனித்தமிழ் நாடு திட்டம் — தனித்தமிழ் நாட்டை இந்தியாவுடன் இணைக்கும் திட்டம்—ஒற்றையாட்சித் திட்டம், சம அந்தஸ்து திட்டம் — இப்போது கடைசியாக ஐந்தம்சத்திட்டம்—இப்படி அவர் திட்ட (ஒரு) மந்திரியாகலாம்!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை.

கே: தமிழினத்தின் இளம் தலைமுறையினர் எதிர்காலத்தில் செய்யவேண்டிய பெருங் கடமை என்ன?

ப: தமிழ் மக்கள் இந்நாட்டில் சுயமரியாதையுடன் வாழக்கூடிய ஒரு நிலையை தோற்றுவிப்பதுதான்!

கே: போராட்டம் நடத்துவதற்கு தேவையான துணிவோ மனவுறுதியோ இலங்கைத் தமிழினத்தில் பெரும்பாலோருக்கு இல்லை என்று ஒரு சிலர் கூறுகின்றனரே— அவர்கள் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

ப: ஏற்றுக்கொள்ள மாட்டேன். நசுக்கப்படும் புழுக் கூடதிருப்பிக் கடிக்கமுயலும் போது புழுவிலும் கீழான வனாகிவிட்டானா ஈழத்தமிழன்?

கே: நமது அமிர் அண்ணாவை ஈழத்து நாவலர் என்று முதன் முதலில் அழைத்தது யார்?

ப: முரசொலி அடியார்!

ஃ

வேலின் செல்வன்,
யாழ்நகர்.

கே: துரையப்பாவின் நிர்வாகத்தில் வெடிப்பு விழுந்துள்ளதாமே...?

ப: 'வெடிப்புக்களை' காட்டித்தானே துரையப்பாவின் அரசியல் வியாபாரமே ஓடுகிறது!

ஃ

திருமதி ஐ. ஜேசன்புள்ளே,
அல்லிப்பளை.

கே: தமிழுக்குச் சிறு சலுகைகூட வழங்கக்கூடாதென்ற, அடம்பிடித்த 'லங்கா ஜாதிக குருசங்கமய' என்ற சிங்களவரின் சங்கத்திலே, தமிழைப் பற்றித் தெரியாவிடினும் தமிழைச் சொல்லி வயிறு கழுவுகிற சில தமிழாசிரியர்கள் உறுப்பினராகச் சேர்ந்து தலைமையாசிரியராகக் குறுக்கு வழியிலே பதவி உயர்வும் பெற்றிருக்கிறார்களே இவர்கள் பிறந்தது, ஏன்? எப்படி? இந்த 'வீரர்களை' எப்படி அழைக்கலாம்?

ப: பிறந்தது பூமிக்கு பாரமாக! இவர்கள் பிறந்தது எப்படி என்பதை வெளியில் சொன்னால் தமிழ் பெண் குலத்துக்கே அவமானம்!" ஆ(இ)ரியத் துரோகிகள்' என்று இவர்களை அழைக்கலாம்!

கே: ஈழத்தமிழினத்தில் இன்றைய ஆடவர்கள் பலர் சுதந்திர வேட்கையின்றி, விடுதலை உணர்ச்சியின்றி, வெறுஞ்சோற்றுப் பிண்டங்களாக, வெறும் வாயால் வீண் கதைகள் பேசிக் கொண்டு, கூலி வேலை செய்வதில்தான் நிபுணர்களாக எருமை மாடுகளாக வாழ்கிறார்களே, இவர்களை எவ்விதம் உலக அறிவு உடையவர்களாக ஆக்கலாம்.

ப: ஏனைய நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வரலாறுகளை உள்ளத்தை தொடும்படி எடுத்துக் கூறுவதன் மூலம்!

ஃ

வி: ஆனந்தன்
முல்லைத்தீவு

கே: வடக்குக் கிழக்கு மாகாண பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், மாணவர்கள் விரும்புவதால் சிங்கள ஆசிரியர்களை விரைவில் அனுப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கிறதாம் இதை எப்படி தடுக்கலாம்?

ப: ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைக்கு சிங்களப் போதனை தேவையில்லை என்று அறிவிக்கவேண்டும்! சிங்கள வகுப்புக்களுக்குபோக வேண்டாம் என்று தமது பிள்ளைகளை கேட்டுக்கொள்ள வேண்டும்!

ஃ

சி: பவரத்தினம்
சொற்றுவதிதை
வல்வெட்டித்துறை

கே: நெல்லை— ஐ: நடேஸ் என்பவர் முன்பு கேட்ட கேள்வியான 'தனிப்பெருந் தலைவர் தோல்வியுற்றால்?... என்றதற்கு தாங்கள் அளித்த பதிலின் தீர்க்கதரிசனத்தை வெள்ளி' பாராட்டுகிறதே?

ப: பாராட்டுக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து நான் அந்தப்பதிலை அளிக்கவில்லையே!

கே: வெள்ளி பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: உண்மையை யாருக்கும் அஞ்சாது எடுத்துக் கூறும் ஒரு ஏடு!

கே: தமிழரசுக்கும் சி: ஐ: ஏக்கும் தொடர்புள்ளதாக புதுயுகம் எழுதியிருக்கிறதே பார்த்தீர்களா?

ப: நாய்க்கு எங்கு அடிபட்டாலும் காலைத்தான் நொண்டும். அதுபோலத்தான் எதை யெடுத்தாலும் ஸி. ஐ. ஏ. ஞாபகமே இந்தக்கம்யூனிஸ்டுகளுக்கு வருகிறது!

ஃ

கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா

கே: நாம் மனநிம்மதியாக வாழ்வதெப்படி?

ப: "தம்மின் மெலியாரை நோக்கித்தமதுடமை அம்மா பெரிதென்று" அகமகிழ வேண்டும்!

கே: சிறு சந்தேகத்தால் கோபங்கொண்ட இரு சகோதரர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை?

ப: சந்தேகம் தீராத வியாதி—அது வந்தாலே தடுமாறும் அறிவென்னும் ஜோதி!

ஃ

க: இளையதம்பி
கிளிநொச்சி

கே: புதுயுகம் ஆசிரியர் இல்லாத பொய்களை தனது பத்திரிகையில் எழுதுகிறாரே இவர் மூளையில் ஏதாவது...!

ப: 'ரிப்பெயருக்'காக விரைவில் ரஷ்யாவுக்கு அனுப்பப்படவிருப்பதாக கேள்வி!

ஃ

கே: இராஜா.
வல்லை.

கே: கம்யூனிஸ்ட் ஏடான புதுயுகத்தில், புதுமைலோலன் எழுதும் கட்டுரைக்கு எவ்வளவு பணம் வாங்கி இருப்பார் குயுக்தியாரே!

ப: தெரியவில்லை! கையில் பணம் சேர்ந்த பின்னர்தான் ஏழைகளைப்பற்றி சிலருக்கு எண்ணம் வருகிறது! கம்யூனிசக் கருத்தும் அதன் பின்பே வருகிறது!

ஃ

தமிழரசி,
பருத்தித்துறை:

கே: கடந்த தேர்தலில் த. காங்கிரஸ் வேட்பாளரும் இப்போது நகரபிதாவாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராகவும் இருக்கும் நடராசாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அரசியலில் வேசையாடுபவர்களைப் பற்றி அபிப்பிராயம் என்னவேண்டிக்கிடக்கிறது!

ஃ

சி. சதாசிவன்,
சாவகச்சேரி.

கே: மது அருந்துபவர்கள் கெட்டுப்போகிறார்கள்' வெறுத்து ஒதுக்கப்படுகிறார்கள், காடைத்தனம் புரிகிறார்கள். கல்லூரி மாணவர் அனேகர் இரகசியமாகக் கள் அருந்துகிறார்கள், காடைத்தனம் புரிகிறார்கள் வேதநூல்களில் மது அருந்துவது பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டிருக்கிறதல்லவா: மதுவால் ஏற்படும் தீங்குகள் சொல்லி முடியாது. அப்படிபபட்ட மதுவை ஒரு அரசாங்கம் முன்னின்று நடத்துவதென்றால், ஒருகாலத்தில் இரகசியமாக நடைபெறும் விபச்சார விடுதிகளும் தேசியமயமாக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே நினைக்கிறேன், தங்கள் கருத்தென்ன!

ப: 'சோசலிசத்தின்' பெயரால் எதுவும் நடக்கலாம்,

ஃ

'அன்னை இல்லம்'
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

கே: எம் வீரத்தலைவன் இருப்பு மனிதன் இன்றிருந்தால்...!

ப: தமிழின எதிரிகள் கிடுகிடுத்து நடுங்கிக் கொண்டிருப்பார்கள்!

## தமிழா! உன் சாதியும் நீயும்!

—தமிழ் ஆனந்தன்—

தன்குலப் பெருமை காத்தான்
தன்னுயிர் தந்து வீர
மன்னவன் கட்ட பொம்மன்!
மறத்தமிழ்க் குலத் துதித்த
பொன்னுடற் பெண்டிர் — போரில்
புறங்காட்டி...... கணவன் வந்தால்
அன்றுடன் அவனை நீக்கி
தமிழ்க்குலப் பெருமை காத்தார்!

கணவனை இழந்தும் நெஞ்சம்
களித்தவள் தமிழ்ப் பெண்—தன்னை
மணந்தவன்—வீரன் காயம்
மார்பிலே கொண்ட கோலம்
நினைந்துளம் நிறைவாள்! — தமிழர்
நீதியின்படி... போர்க் கோலம்
தனையனுக் களிப்பாள்! —மானம்
தன்னுயிர் தந்து காப்பாள்!

உயர்ந்தவ னுவான் போரில்
உயிரிழப் போனே! முன்னாள்
இயற்கையாய் மரணங் காண்போன்
சடலத்தில் போர்வாள் பாய்ச்சி
அயரினும் வீரங் காப்பர்,
பழந் தமிழ் மறவர் — மரணம்
நியதி!... நீ தமிழன்! தமிழா!
நீதி.. போர் செய்து சாதல்

விலங்கிற்கும் உணர்வொன் றுண்டு
வினையே கேளடா! — காட்டு
விலங்குதான் புலி! ஊனின்றி
உயிர்விடும்! ஆனால் புல்லை
வலிந்துண்டு உயிர் வாழாது!
மரக்கட்டைப் பிறப்பே!—நாற்ற
மலத்தினைத் தின்று வாழும்
பன்றியின் அவதாரம் நீ!

செந்தமிழ்க் குலத்தின் மானம்
சிதைவதோ? தமிழா! நீயேன்
மந்தையாய் மாறிப் போனாய்?
மாற்றான்கா லடியில் வீழ்ந்து
வந்தனை நாளும் செய்து
வாழ்பவன் தமிழ... னேடா?
சிந்தையை விற்றாய் பாவி!
[illegible] போ! போ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விடுதலையே முதலில்! வர்க்கப்பிரச்சினை பின்னர்!

அன்பு நண்பா,

'மே' நாள் மேதினி எங்கும் கொண்டாடப்படும் பாட்டாளித்திருநாள்! வாயிருந்தும் பேசமாட்டா ஊமைகளாய், ஆமைகளாய் வாழ்ந்திருந்த தொழிலாளவர்க்கம் ஒன்று திரண்டு உரிமைக்காகப் போராடி செந்நீர் சிந்தி உலகவரலாற்றில் ஒரு திருப்பத்தினை ஏற்படுத்திய திருநாள்!

உழைப்பவர்கள் பலர்; உண்டு கொழுப்பவர்கள் சிலர்; பாடுபடுவோர் பலர்; பயனடைவோர் சிலர்; உழைக்கும் தொழிலாளிக்கு வாழ்ந்திட ஓர் ஒண்டுக் குடிசைகூட இல்லை; அவனது உழைப்பை உறிஞ்சி வாழ்பவனுக்கோ உப்பரிகையும் உல்லாச வாழ்வும்; கதறி அழும் குழந்தைக்கு பருகிடப்பாலில்லை தொழிலாளி இல்லத்தில்; பணக்கார வீட்டிலோ பாலிலே குளித்து விளையாடுகின்ற பளிங்குப் பாவையர்; இந்நிலை நீடிக்கவிடலாமோ; அல்லும் பகலும் அனவரதமும் ஒரு சிலர் உண்டு கொழுத்திட, நாம் உழைத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்திட வேண்டுமோ; நமக்கென்றோர் வாழ்வினை, நமக்கென்று வரையறுக்கப்பட்ட உரிமைகளை, வென்றெடுத்திடவேண்டாமோ; என்றெல்லாம் தொழிலாளர்களின் மனதில் துளிர்விட்டசிந்தனைகள், சிக்காகோ நகரில் செயலாக மாறி—ஒருமதியோரின் அடக்குமுறையைப் பொடிப்பொடியாக்கி, வீரவரலாறு தீட்டிய திருநாள்! ஆம், எட்டுமணி நேர உழைப்பு, எட்டுமணி நேர பொழுதுபோக்கு, எட்டுமணி நேர ஓய்வு என்ற தொழிலாளர்களின் அடிப்படை உரிமையை வரையறை செய்துகொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் 'மே' நாள்! இத்திருநாளில் தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்துக்கு எனது இதய வாழ்த்துக்களை தெரிவித்திடுவதில் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன்!

பூனையும் தாக்கப்படத் தாக்கப்படப் புலியாகமாறிடுவதுபோல—ஆதிக்கக்காரர்களால் நசுக்கப்படுகிறவர்கள் எந்த நாளும் நசிந்து போய்க்கொண்டேயிருக்கமாட்டார்கள்; துணிந்து நின்று ஒரு நாள் ஆதிக்க மனிதான் மத்தர்களை எதிர்த்துப்போராடி தங்கள் பிறப்புரிமைகளையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டியே தீருவார்கள் என்பதனை தாரணியெங்கும் அறிவித்திடும் ஒரு திருநாளாக 'மே' நாள் விளங்குகிறது!

அடக்கப்படுகிறவர்களும் ஒடுக்கப்படுகிறவர்களும், உரிமை மறுக்கப்படுவர்களும், நசுக்கப்படுகிறவர்களும், ஒரு நாள் எரிமலைபோல கொதித்தெழுந்திடுவர் என்பதை நமக்கெல்லாம் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கும் நாளாக 'மே' நாள் இருந்திடுகிறது!

தொழிலாளவர்க்கத்தை முதலாளி வர்க்கம் நசுக்குவதும், சிறுபான்மை இனத்தை பெரும்பான்மை இனம் நசுக்குவதும், உயர்ந்த சாதிக்காரன் என்று கூறிக்கொள்பவன், தாழ்ந்த சாதி என்று கூறி மற்றொருவனை கொடுமைப்படுத்துவதும், எல்லாம் அடிப்படையில் ஒன்றுதான்! இவையெல்லாமே ஆதிக்க வெறியிலிருந்துதான் வெளிப்படுகிறது! இத்தகைய ஆதிக்கவெறி எங்கிருந்தாலும்—அதற்கு எதிராக அடக்கப்படுபவர்கள் ஒரு நாள் பொங்கியெழுந்து போராடி தங்கள் உரிமையை நிலைநாட்டியே தீருவார்கள் என்கின்ற நல்ல நம்பிக்கையை நமக்கெல்லாம் தந்து கொண்டிருக்கின்ற நாளாக 'மே' நாள் ஆண்டுதோறும் வந்துகொண்டிருக்கிறது!

'மே' நாள்—ஆதிக்க புரியினருக்கு எச்சரிக்கை நாளாகவும் அடக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு எழுச்சிதரும் நாளாகவும் அமைகிறது! அடக்குமுறைகளுக்கு எதிராக போராடி பிறப்புரிமையை நிலைநாட்டிட உறுதியெடுத்துக்கொள்ளும் ஒப்பற்ற திருநாளாக 'மே' நாளை நாம் கருதுகின்றோம்!

நண்பா, 'மே' நாள் பற்றி நாம் இப்படி மகிழ்ந்து பேசியவுடன், 'பார், பார். 'இது' களும் 'மே' நாள் கொண்டாடும் அதிசயம் பார்! 'இது'களுக்கு ஏது மே நாள் கொண்டாடிட உரிமை: பச்சைசப்பிற்போக்கு வாதிகள்; முதலாளித்துவ வாதிகள்; பூர்ஷ்வாக்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாட்கள்; என்றெல்லாம் 'மே' நாளை தங்களுக்கேயுரிய 'சீதனம்' ஆகக்கருதிக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் நம்மைப்பார்த்து எக்காளமிட்டிடக் கூடும்; ஏளனம் செய்திடக்கூடும்!

ஆனால், இந்நாட்டில் 'மே' நாளை உணர்ச்சிபூர்வமாக எழுச்சியுடன் கொண்டாடும் உரிமை நமக்கு மட்டுமேயுண்டு—ஏனெனில் நாம், இந்நாட்டில் அடக்கப்படும் ஒரு இன மக்களுக்காக—உரிமை மறுக்கப்பட்டிருக்கும் மக்களுக்காக—ஓர் ஆதிக்கத்துக்கு எதிராக போராடி வரும் ஒரு இயக்கத்தைச்சேர்ந்தவர்கள்! சாதி வெறியர்களையும், சனாதனவாதிகளையும் வர்ணாச்சிரமத்தையும் துணிச்சலுடன் எதிர்த்துப் போராடி வருபவர்கள் நாம்!

அடக்குமுறையும் ஆதிக்கவெறியும் எந்த வடிவத்திலிருந்தாலும் சரி-எவன் அவற்றைஎதிர்க்கிறானோ அவனே மே நாள் கொண்டாடிட முழுக்க முழுக்கத் தகுதிபடைத்தவன். அடக்குமுறையினை அள்ளி வீசுபவர்களுக்கும் ஆதிக்க மமதை பிடித்தோருக்கும் 'மே' நாள் கொண்டாடிட எதுவித யோக்கியதையும் கிடையாது!

இந்நாட்டு இடதுசாரிகளை எடுத்துப்பார்த்திடின், இன்று இவர்கள் செய்வதென்ன? ஈழத் தமிழ் தேசிய இனத்தின் மீது இந்நாட்டின் மற்றோர் இனம்—பெரும்பான்மை இனம்—ஆதிக்கம்புரிவதனை இவர்கள் இருகை நீட்டி வரவேற்றுத் துணைபோவது மட்டுமல்ல—இந்த ஆதிக்க வெறிக்கு எதிராகப் போராடும் தமிழினத்தவர்களை எதிர்த்துமன்றோ வருகின்றனர்!

ஒரு தேசிய இனம் அழிவிலிருந்து தன்னை மீட்டுக்கொள்வதற்கு நடத்தும் ஜீவ மரணப் போராட்டத்துக்கு எதிராக ஆதிக்கம்புரிய நினைப்பவர்களுடன் கைகோர்த்து நிற்பவர்கள் எப்படி தங்களை இடதுசாரிகள் என்று அழைத்துக் கொள்ள முடியும்?

ஒருவன் தனக்கென ஓர் இல்லத்தை அமைத்த பின்புதான், அந்த இல்லத்தை எப்படி சீர்படுத்துவது என்று சிந்தித்திட முடியும்! இல்லிடமே இல்லாதவன், இல்லத்தை சீர்படுத்தும் முறை வகைபற்றி கனவு காண்பது சிரிப்புக்கிடமானதாகும்!

இதே போன்றதேதான், விடுதலைக்குப் போராடிவரும் தமிழ்தேசிய இனத்தின் மத்தியில் வர்க்கப் பிரச்சினையைக் கிளப்புவதும்! தமிழ் தேசிய இனத்தின் இன்றைய முதல் கடமை, அடிமைத் தளையை அறுத்தெறிந்து, தனது விடுதலையை நிலை நாட்டி சுயாட்சியை நிறுவுதல்தான்! அதன் பின்புதான் வர்க்கப் பிரச்சினையைப்பற்றி— சோசலிசமா, கம்யூனிசமா, அல்லது வேறு எந்த 'இசமா' என்பது பற்றி நாம் முடிவு செய்யமுடியும்!

## அரசியல் மேடை

சரியான பாதுகாப்பு இல்லாவிடின், ஓர் இனம் தனது தனித்துவத்தையும் மொழியையும் இழந்து அழிந்தொழிந்து போய் விடும்! அடிப்படி அனேக இனங்கள் அழிந்தொழிந்து போயிருப்பதை உலக வரலாறுகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. ஆனால் வர்க்கப்போராட்டம் பின்போடப்படுவதால், தொழிலாள வர்க்கம் உலகின் எந்த மூலையிலாவது அழிந்து ஒழிந்து போனதாக வரலாறே கிடையாது! எனவேதான் இன விடுதலை முதலில்; அதன் பின்னரே வர்க்கப்போராட்டம் என்று நாம் கூறுகிறோம்!

தமிழ்தேசிய இனம் விடுதலை பெறும் வரையில்—வர்க்கரீதியான எந்தக் கூக்குரலும், தமிழ் மக்களிடையே எடுபடாது என்பதை இந்நாட்டு இடதுசாரிகள் இன்னும் உணராதது உண்மையில் விசித்திரமானதுதான்!

தமது உதிரத்தை நீராகப்பாய்ச்சி, உடலை எருவாக்கி காடாகக் கிடந்த மலைநாட்டுப் பூமியை வெட்டித் திருத்தி பொன் விளையும் பூமியாக்கிய பதினைந்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டில் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, நாடற்றோர் ஆக்கப்பட்டு நாயினும் கடையராக நடத்தப்படுகிறார்களே—இதற்குக் காரணம் என்ன? இந்தப் பதினைந்து இலட்சம் பாட்டாளிகளின் குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, மற்றும் சகல உரிமைகளும் இந்நாட்டில் மறுக்கப்பட்டுள்ளனவே இதற்குக் காரணம் என்ன? [illegible] உழைத்துத்தரும் அந்த மக்கள் அடிமைகள் போல வாழ்ந்திடக் காரணமென்ன?

இந்த மண்ணுக்காக உழைத்துழைத்து உருக்குலைந்து பஞ்சைகளாய் பராரிகளாய் போன அந்த மக்கள்—அரசியல் உரிமைகளும், ஏனைய மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு நாடற்றோர் ஆக நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம் அவர்கள் தமிழர்களாக, தமிழைத்தாய்மொழியாகக்கொண்டவர்களாக இருப்பதுதான்! தமிழர்களாக பிறந்ததைவிடவேறு எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் அவர்கள்!

இந்தப் பதினைந்து இலட்சம் தமிழ்த்தோட்டத்தொழிலாளர்களின் பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீட்பதற்காக, இந்நாட்டில் வர்க்கப்போராட்டம் பற்றிப்பேசும் எந்த ஒரு கட்சியும் போராட்டம் நடத்தியதுண்டா? ஏன் அதற்கு இவர்களுக்கு துணிவில்லை? திராணியில்லை? அந்தப் பாட்டாளி மக்களுக்கு உரிமையை மீட்டுக்கொடுப்பதற்குப்பதிலாக அவர்களை நாடு கடத்துவதிலன்றோ தீவிர சுறுசுறுப்பு காட்டி வருகிறார்கள் இந்நாட்டு கம்யூனிஸ்டுகளும் சம சமாஜிகளும்!

'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்! என்று ஒரு பக்கம் குரலெழுப்புபவர்களே மறுபக்கம் "15 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களே, இந்நாட்டை விட்டு மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறுங்கள்" என்றும் குரல் கொடுக்கும் வேதனையான வேடிக்கையை இங்குதான் காணுகிறோம்! இந்த இலட்சணத்தில்தான், 'வர்க்க' ஒற்றுமை பற்றியும் சோசலிசம், கம்யூனிசம் பற்றியும் இவர்கள் வேறு பசப்பி வருகிறார்கள்!

இந்நாட்டில் தமிழ்தேசிய இனம் முதலில் விடுதலை பெற வேண்டும்; அப்படி விடுதலை பெற்றால் மட்டுமே தனது உரிமைகளை அது மீட்டுக்கொள்ள முடியுமே தவிர—வர்க்கப் போராட்டம் பற்றி வாயளவில் பேசிக்கொண்டு நடைமுறையில் இனப்பாகுபாட்டுக்கொள்கைகளைப் பின்பற்றி வரும் இடது சாரிகளால் தமிழினம் துளியும் பயன் பெறப்போவதில்லை!

மலைநாட்டுத் தோட்டத்தொழிலாளர்களின் பறிக்கப்பட்ட அரசியல் உரிமைகளை வரவிருக்கின்ற புதிய இலங்கைக் குடியரசில் மீண்டும் வழங்க வேண்டுமென அரசியல் நிர்ணய சபையில் தமது தமிழரசுக்கட்சிகொண்டு வந்த பிரேரணையை எதிர்த்து வாக்களித்தவர்கள் தாம் இந்தக் கம்யூனிஸ்டுகளும், சமசமாஜிகளும்! இவர்களா தொழிலாளர்களைப் பற்றி பேசுவது?

இந்நாட்டில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் இருக்கக் கூடாது: 'சாதியே' இருக்கக்கூடாது: அது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் நமது கட்சி கொண்டு வந்திருந்த பிரேரணையை எதிர்த்து வாக்களித்தவர்கள் தாம் இந்தக் கம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும்! இவர்களா சமதர்மத்தைப் பற்றிப்பேசுவது?

இந்நாட்டில், தமிழ் பேசும் மக்களுக்கென, ஒரு மதச்சார்பற்ற சமதர்ம சுயாட்சித் தமிழரசை நிறுவி—சோசலிசப் பூங்காவாக ஈழத் தமிழகத்தை உருவாக்குவதன் மூலமே நாம் ஒரு தேசிய இனமாக இந்நாட்டில் தலை நிமிர்ந்து வாழ முடியும்! இதைவிட வேறு நமக்கு மார்க்கமேயில்லை.

எனவே நண்பா, இந்த 'மே' நாளில் அடக்கப்பட்டு ஆளப்படும் அடிமை இனமாக்கப்பட்டு, அல்லல்பட்டு நிற்கும் ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள்—விவசாயிகளும் தொழிலாளர்களும், பாட்டாளிகளும் நடுத்தர வர்க்கத்தினரும், மாணவரும்மற்றையோரும்—அனைவருமே பின்வருமாறு உறுதியெடுத்துக்கொள்ளவேண்டும்:

ஈழத்தமிழகத்தில் மதசார்பற்ற சுயாட்சித்தமிழரசொன்றை நம்முடைய காலத்தில் நிறுவியே தீருவோம்! சாதி பேதமொழிந்த, சமதர்மத் தமிழகத்தை—வர்க்க பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை நம்முடைய வாழ் நாளிலேயே உருவாக்குவோம்! இது உறுதி! உறுதி!

உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்டுகளின் தடுமாற்றம்!

எந்த ஒரு பிரச்சினையிலும்—அது எவ்வளவு சிறியதாயினும் சரி பெரியதாயினும் சரி— நின்று நிதானித்து திட்டவட்டமான தெளிவான முடிவெடுக்கும் அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்று என்று இதுவரை காலமும் கருதப்பட்டு வந்திருக்கிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும், தனது கொள்கையையும் தனித்துவத்தையும் சோரம் போகவிடாத அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்று எனக் கூறப்படுவதுண்டு.

இன்றோ இந்நாட்டு அரசியலில் சந்தர்ப்பவாதத்தில் மூழ்கி, பதவி ஆசையிலும், அதிகார மோகத்திலும் சிக்குண்டு தனது கொள்கைகளை சோரம் போகவிட்டு நாட்டோர் அனைவரதும் நகைப்புக்குரிய கட்சியாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாறிவிட்டது!

இன்றைய கம்யூனிஸ்ட் கட்சியிடம் நிதானமில்லை—கொள்கை உறுதியில்லை—தனது தனித்துவம் காக்கும் துணிச்சல் இல்லை. மாறாக, எப்படியும் (தணிக்கை) இடைத்த பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற சுயநல எண்ணமே மேலோங்கி நிற்கிறது!

தமிழரசுக் கட்சிக்குள் பிளவேற்படப்போகிறதென்றும் கட்சி உடைந்து சிதறப்போகிறதென்றும் ஆரூடம் கூறி வந்த கம்யூனிஸ்டுகள் இன்று தங்கள் கட்சியையே காப்பாற்றிக்கொள்ள முடியாமல் திணறுகிறார்கள்!

தமிழரசுக் கட்சி சென்ற அரசாங்க காலத்தில் சில ஆண்டுகள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்ததுண்டு. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும், தனது தனித்துவத்தையோ, கொள்கைகளையோ காவு கொடுத்ததில்லை!

ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணியுடன் சேர்ந்து இன்று தனது தனித்துவத்தையும், கொள்கைகளையும் பறிகொடுத்துவிட்டது. இதனால்தான் அக்கட்சி இன்று அரசியல் முடிவுகள் எடுப்பதில் தடுமாறுவதைக் காணுகிறோம்.

வங்கதேசப் பிரச்சினையில், தமிழரசுக்கட்சி மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் ஆழ்ந்த தீர்க்கதரிசனத்துடன் முடிவெடுத்து, தொடக்க முதலே வங்க விடுதலைப்போருக்கு ஆதரவாக தீவிரமாக குரல்கொடுத்து வந்ததை நாடறியும்!

ஆனால், சோவியத் ரஷியாவைப் பின்பற்றி வங்க விடுதலைப் போரை முன்னணியில் நின்று ஆதரித்து இருக்கவேண்டிய இந்நாட்டு கொம்யூனிஸ்டுகளோ, பதவி பறிபோய் விடும் என்ற அச்சத்தில், வாய்மூடிக் கிடந்தார்கள்.

(தணிக்கை)

போரில் வங்கதேசம் வெற்றிபெற்று— இலங்கை அரசும் அதை அங்கீகரித்த பின்னர், இப்போதுதான் 'பங்களா தேஷ்' நண்பர்கள் என்று வேஷம்போட ஆரம்பித்திருக்கிறார்கள்.

மரவரிப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், மரவரியை ஒழித்து தவறணை முறையை கொண்டுவருவது, சீவல் தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் செயல் என்ற காரணத்தால், தமிழரசுக்கட்சி அதை எதிர்த்தது; நாடாளுமன்றத்திலும் எதிர்த்து வாக்களித்தது!

ஆனால் கம்யூனிஸ்டுகளோ, மரவரியொழிப்பை தமது கட்சி எதிர்ப்பதாக பத்திரிகைகளில் அறிக்கைவிட்டார்கள்; வடபகுதியில் நடைபெற்ற கூட்டங்களில் முழங்குமுழங்கென்று முழங்கினார்கள்; நாடாளுமன்றத்திலோ மரவரியொழிப்பை ஆதரித்து வாலைச் சுருட்டிக்கொண்டு, கைதூக்கினார்கள்.

இப்போது குற்றவிசாரணை நீதிக்கமிஷன் மசோதாவும், சட்டவியாக்கியான திருத்த மசோதாவும் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத அரசியலை மீண்டும் அம்பலமாக்கி விட்டது; அவர்களது தெளிவற்ற போக்கை எடுத்துக்காட்டி விட்டது!

இந்த இரு மசோதாக்களும் அடிப்படையிலேயே மக்களின் உரிமைகளை மறுக்கும் மசோதாக்களாக இருப்பதனால், அவற்றை எதிர்த்துவாக்களிப்பதுஎன்று முடிவு செய்து, தமிழரசுக்கட்சி பா.உ.க்கள் அப்படியே நடந்துகொண்டனர்!

கொம்யூனிஸ்ட் கட்சியும், இந்த மசோதாக்கள் மக்களின் உரிமைகளை மறுப்பதாக இருப்பதால் அதை ஆதரிப்பதில்லை என முடிவு செய்தது. மசோதாவை எதிர்த்து வாக்களிப்பதற்குத்தான் அக்கட்சிக்கு துணிவில்லை; திராணியில்லை! போகட்டும்!

மக்களின் உரிமைகளை மறுப்பதாக கம்யூனிஸ்ட் கட்சி கருதும் இம்மசோதாவை அமைச்சரவை மட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி பீட்டர் கெனமன் ஆதரித்திருக்கிறார்!

நாடாளுமன்றத்தில், கம்யூனிஸ்ட் தலைவருட்பட நான்கு பிரதிநிதிகள் மசோதாவை ஆதரித்து வாக்களிக்காமல் இருக்க, உதவியமைச்சர் துடாவை மட்டும் ஆதரித்து வாக்களித்திருக்கிறார்!

கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையை சேர்ந்த நியமன உறுப்பினர் எம். சி. சுப்பிரமணியம் ஆதரித்து வாக்களித்திருக்கிறார். அதுமட்டுமல்ல—கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகள் தம்மைக் கட்டுப்படுத்தாது என்று அறிக்கை வேறு விட்டிருக்கிறார்! இப்படிக்கூறிய பின்னும் அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லையென வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்திருக்கிறது!

இவையெல்லாம் சுட்டிக் காட்டுவதென்ன? கம்யூனிஸ்ட் கட்சியின் தடுமாற்றத்தையும் அதன் கட்டுப்பாடற்ற தன்மையையும்தான்! பதவி ஆசை வரும்போது எந்த அரசியற் கட்சியும் தடம்புரளுகிறது என்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் விதிவிலக்கல்ல!

அதுமட்டுமல்ல—அரசாங்கக் கட்சிக் கொறடாவின் கட்டுப்பாட்டை மீறி குற்றநீதிக் கமிஷன் மசோதாவுக்கு சாதகமாக வாக்களிக்கத் தவறிய கம்யூனிஸ்ட் பா.உ.க்கள் மீது நடவடிக்கையெடுக்க பிரதமர் தீர்மானித்ததும், அஞ்சி நடுங்கி, தாம் எதிர்ப்பதாக கூறிய மற்றோர் மசோதாவை—சட்டவியாக்கியான திருத்த மசோதாவை ஆதரிப்பது என்று கோழைத்தனமாக கொம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்திருக்கிறது.

கொள்கையே போனாலும்சரி, கட்சியே அழிந்தாலும் சரி-அரசுடன் ஒட்டியிருந்து கிடைத்த பதவிகளை எப்படியென்றாலும் காப்பாற்றிக்கொள்வதே கம்யூனிஸ்டுகளின் இன்றைய நிலை என்பது துல்லியமாகிவிட்டது!

கம்யூனிஸ்ட் கட்சி தடுமாறுவதின் மூலகாரணம் இது தான்!

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

மீலாத் சிறப்புக் கட்டுரை:

## நபிகள் காட்டிச் சென்ற நல்வழி நடந்து நற்கதியடைவோம்!

விடத்தல்தீவு இக்பால்

அகில உலகிற்குமே அதிபதியான அல்லாஹுதஆலா அகில உலக மக்களுக்கும் ஒரு அருட்கொடையாகவே அண்ணல் நாயகம் றசூல் (ஸல்) அவர்களை இவ்வுலகிற்கு அருளினான்.

விரிகதிர் கொழுந்தும் வெய்யோனைவிட, தண்ணொளி பரப்பும் சந்திரனைவிட விண்ணில் மின்னும் தாரகையைவிட, மழைப்பைத் தரும் மலையைவிட, கொதித்துவிக்கும் கொடுங்கடலைவிட எறும்பு முதல் யானை ஈறாக எண் கோடி ஜீவராசிகளையும் விட மனிதனையே தன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தான் இறைவன். அதுமட்டுமின்றி அகிலத்தையே அடக்கி ஆளக்கூடிய வல்லமையையும் கூடவே கொடுத்தான். மனிதனுக்கு நன்மையையும், தீமையையும் பிரித்தறிவித்து நல்லதின் ஏற்றத்தையும், தீயதின் தாழ்வையும் எடுத்துரைத்தான். இவற்றுக்கெல்லாம் மேலாக தான்பெற்றபெரும் பேறுகிய பகுத்தறிவைப் பயன்படுத்தி நல்வாழ்வுக்கான உரிமைகளையும் உவந்தளித்தான்.

இவ்வாறெல்லாம் சிறப்புற்று, உயர்வுற்று ஒளிபெற்று வாழவேண்டிய மனிதன் அதன் வழியே தன் விழியைச் செலுத்தி உயர்வின் உச்சத்தை அடைவதற்குப் பதிலாக இருளிலே தடுமாறி படுபாதாளத்திலே வீழ்ந்து மடியமுற்பட்டான்.

அன்பையும், பண்பையும் மறந்து வன்மத்தையும், கன்மத்தையும் கடைப்பிடித்து ஒழுக்கத்தையும், விழுப்பத்தையும் துறந்து பழியையும், அழிவையும் அடைந்து தாழ்வுற்றான்.

என்றாலும் வற்றாத காருண்யமுள்ள ஏகவல்ல இறைவன் வழிதவறிய மனிதனைக் கண்டு மனமிரங்கி அவனை நேர்வழிப்படுத்த விரும்பினான். எனவே தான் இறைவன் அம்மனிதருள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை புனிதராக்கி நன்மையையும், தீமையையும் புலப்படுத்தி பகுத்தறிவின் எல்லையையும் சுட்டிக்காட்டி நேர்மையானமுறையில் வழி பிறழாது ஒழுகும் வழியையும் அவர் தம் வாழ்வின் மூலமும், வாக்கின் மூலமும் நமக்குக் காட்டித் தரச் செய்தான்.

அம்மனிதப் புனிதரைப் பற்றி அமரர்கள் இறைவனிடம் விளக்கம் கேட்டபொழுது "நான் அவரைப் படைக்க நாடியிராவிட்டால் இந்த உலகையே படைத்திருக்கமாட்டேன்" எனப் பதிலிறுத்தான். நான் அவரை மனிதர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவே அனுப்பி வைத்தோம் என்றும் திருமறையில் கூறுகிறான் இறைவன்.

அந்த உத்தமர்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாகும் — அடிவானத்தில் கிழக்கு வெளுக்கும் வேளை—அது கி. பி. 571ம் ஆண்டு றபியுல் அவ்வல் பிறை 12ம் நாள் இப்பூவுலகில் அன்னை ஆமினாவுக்கும், தந்தை அப்துல்லாவுக்கும் ஏகப்புதல்வராக அவதாரமெடுத்தார்கள்.

அன்னவர்களின் வருகையால் அகில உலகமே ஒளிமயமாகியது. 'இருண்ட கண்டம்' என சரித்திர ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட அரேபியா நாடு ஒரு குறுகிய கால இடைவேளைக்குள் 'துருவ நட்சத்திரம்' எனப் பெயர் பெறுமளவுக்கு அரேபியா நாடு ஒளிபெற்றது. உயர்வடைந்தது.

நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் ஒரு இடையனாக, பின்னர் வணிகனாக, பின்னர் மணவாளனாக, கணவனாக, தந்தையாக, நபியாக, றசூலாக, சேனாதிபதியாக, போர் வீரனாக, தூதுவனாக, வழிகாட்டுபவனாக சர்வாதிகாரியாக, சோஷலிசவாதியாக, தலைவனாக இப்படிப் பல படித்தரங்களை தமது அறுபத்தி மூன்று ஆண்டுகால கட்டத்தில் அடைந்து வாழ்ந்து காட்டினார்கள். இறைவன் நபியவர்களுக்கு தனது அருட்கொடையான திருக்குர்ஆனையும் அவர்மூலம் வெளிப்படுத்தி அதை மாந்தர்களுக்கு போதிக்குமாறு பணித்தான். 'நபியே! நீ போதிப்பவர் மட்டுமேயன்றிப் பலாத்காரம் படுத்துபவரல்ல' எனவும் எச்சரித்தான்.

நாயகம் (ஸல்) அவர்கள் அன்பு, பண்பு நேர்மை, வாய்மை, பொறுமை, இவற்றைத் தம் துணை ஆயுதங்களாகக் கொண்டு அக்காட்டுமிராண்டிகளை நேர்வழிப்படுத்த முற்பட்டார்கள். அவ்வேளை அவர்கள் அடைந்த இன்னல்களும், துன்பங்களும் எழுத ஏட்டிலடங்காதவை. கல்லால் அடிபட்டார்கள், சொல்லால் அடிபட்டார்கள். அக்காட்டுச் சனங்கள் பெருமானார் அவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் விளைவித்தார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

## நபி மொழி!

'சம்மாந்துறை—அலீஸ்'

வேறு மதத்தைப் பழியாதே!
வேற்றுமை யுலகில் காட்டாதே!
மாறுகள் செய்து வாழாதே
மடமைகள் கொண்டு அலையாதே!

பேசும் மொழிக்கு உரிமையினை
பெற்றே இங்கு வாழ்ந்திடுவாய்;
காசும் பணமும் கௌரவமும்
கடைசி வரைக்கும் நில்லாதே!

என்றே அருள்நபி மொழிந்ததனை
ஏற்று நாமும் ஒழுகோமேல்;
கன்றை இழந்த பசுபோலே
கதறி ஒருநாள் அழுவோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29-4-72 புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களது நினைவு தினமாகும். அதையொட்டி கவிஞரை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை இங்கு இடம் பெற்றுள்ளது.

# பொங்கு தமிழருக்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென சங்கு முழக்கிய கவிஞன்!

## பாவேந்தர் காட்டிய பாதையில் பைந்தமிழினம் நடை போடட்டும்!

"பாரதியார் மீட்டுக் கொண்டு வரவிரும்பியது அவர் இறந்ததென்று கருதிய பாரதப் பழம் பண்பும்; பாரதிதாசன் மீட்டுக் கொண்டு வர விரும்பியது அவர் இறந்ததென்று கருதிய பழைய மனிதாபிமானத் தமிழ் பண்பு. இருவரும் தத்தம் கருத்துத் தளத்தில் கவிதை மாளிகை எழுப்புவதில் வெற்றி பெற்றவர்களே" என்னும் 'சாலை'யின் கூற்றில் (புதிய தமிழ்க் கவிதை - பக் 76) பொதிந்துள்ள உண்மையை பாரதிதாசனின் கவிதைகளைப் படித்து உணர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்.

ஆனால் கவிஞர் சுரதாவோ இதற்கும் ஒரு படி மேலே சென்று; 'பாரதியாருக்கு ஒரே ஒரு பாரதிதாசன் கிடைத்தார்; ஆனால் பாரதிதாசனுக்கோ பலதாசர்கள் கிடைத்தனர் என்றுகூறி நம் புரட்சிக் கவிஞரை குருவை மிஞ்சிய சிடராக்க முனைகிறார். எது எவ்வாறுயினும் பாரதிதாசனரது கவிதைகளால் தமிழ்ச் சமுதாயம் தன்னுணர்வடைந்து செயல்பட முனைந்தது என்பது விளங்கி விடுகிறது.

அவரைப் பின்பற்றி வந்த கவிஞர்கள்; காசி ஆனந்தன்; சுரதா; முடியரசன்; கம்பதாசன் போன்றோரது பிரபல்யமும்; அக்கவிஞர்களிடையே இழைந்து கிடக்கும் ஒருவித ஒருமைப்பாட்டுணர்வும் இன்றும் அப் புதுமைக் கவியை நம்முன் உலவவிட்டு அவரது எண்ணங்களை வலியுறுத்தி நிற்றலை உணர்ந்திட முடிகிறது.

'நகும்படி ஓர் தமிழறிஞன்
தமிழர்க்கு இன்னல்
நாடுவனேல் அவ்வறிஞன்
முட்டாள் ஆவன்!
இகழ்மிக்க ஒரு முட்டாள்
தமிழர்க்கு இன்னல்
எண்ணுனேல் அம்முட்டாள்
அறிஞனாவான்!'

எனத் தமிழ் உணர்ச்சியின் வேகத்தால் உந்தப்பட்டு தமிழைப்பாடுவதிலே தான் கவித்துவத்தின் சிறப்பனைத்தும் உள்ளது என்னும் நினைவில் கவிதை செய்தவர் நம் கவிஞர்!

"இழந்த பழம் புகழ் மீள
வேண்டும் நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய்
வாழவேண்டும்
வழிந்தொழுகும்
சுவைத்தமிழே
பெருக வேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம்
தொலைய வேண்டும்.'

என எங்கும் எந்தமிழன் ஏற்றம் பெருகுதலையே காலவிரும்பிக் கவிதை பாடியவர் அவர். அவரது பாடல்கள் சிலவற்றில் அவர் தமிழை எவ்வாறெல்லாம் பாடி மகிழ்ந்துள்ளார் என்பதை இக்கட்டுரையிற் சிறிது பார்ப்போம்.

### தமிழ்ச் சுவை:-

'..................இயலாம்
பைந்தமிழ் பேசச்செய்தாய்
இசையாம்தமிழைத்தந்தாய்
—பறவை
ஏந்திழை இனிமைக்
குரலால்!'

இயற்கையின் அழகில் மனதைப் பறிகொடுத்த கவிஞர்; பறவையின் ஒலிக்கும், இளம் பெண்களின் குரலுக்கும் உவமை கூறிட 'இசையாம் தமிழை' அழைக்கிறார்.

அதிகாலை என்னும் கவிதையில்;

'தமிழ்த்தேன் எழுந்தது விட்டினர் மொழியெலாம்' எனவும், காதலின்பத்தைப் பற்றிக்கூற முற்படுகையில், 'தமிழ் அன்பு சேர்த்துப் பேசி......' என அன்பினுக்கு அடையாக தமிழை அழைத்திருப்பதையும் காண்பவர்கள் அவரது தமிழ்ப் பற்றினையும் எதனையும் தமிழோடு இணைத்துப் பாடுவதில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

'குடும்பவிளக்கு' என்னும் 'குறளோவியம்' கவிஞர் நந்தமிழர்க்களித்த ஓர் இனிய காவியம். அதில் வரும் நாயகன் மணவழகனும்; நாயகி தங்கத்தம்மாளும் என்றும் எம் நினைவைவிட்டு நீங்காத ஓவியங்களன்றோ......?

இதோ இல்லத்தலைவி தங்கத்தம்மாள காலைப்பாடல் இசைக்கிறாள். அதனைக் கூறிடும் கவிஞர்.

'...............இசையில்
வாழிய வையம் வாழிய
என்று
பாவலர் தமிழிற் பழச்சுவை
சேர்த்தாள்'

எனப் பாவலர் தமிழில் நறுங்கனியமுதச் சுவையைச் சேர்த்து வழங்கும் இசையினை அவள் குரலில் காணும் அவர் பிறிதோரிடத்தில் அவன் உணவு உண்ண அமர்ந்த வேளையில் மாங்கனியில் தமிழ்ச்சுவையைக் காண்பதாக,

'தணல் நிற மாம்பழத்தில்
தமிழ்நிகர் சுவையைக்
கண்டான்'

என்று பாடுகிறார்:

'சமையல் முடித்துத்
தமிழோ
அமிழ்தோ எனச்
சோறிட்டழைத்தனே'

'தண்டமிழ்த்தேன்
உண்டவர்கள் பொருளை
எண்ணித்
தனிப்பார்போல்
தனித்திருந்தான்.'

'நல்ல புறநானூற்றில்
நான்கும் திருக்குறளில்
கல்வி ஒரு பத்தும்
கடுந்தோல் விலக்கிச்
சுளை சுளையாய் அம்மா!
சுவை சுவையாய் உண்டேன்
இளையேன் நான்
செந்தமிழின் இன்பத்தை
என்னென்பேன்.'

எனவரும் பாடல் வரிகளில் தமிழை அமிழ்தாக; தேனைச் சுளை சுளையாய்ச் சுவைசுவையாய் உண்ணும் இன்பப் பொருளாக கவிஞர் நுகர்ந்து அனுபவித்திடும் [illegible] எமக்கு விளக்கி நிற்பதோடு அந்தச் சுவையினை நாமும் உணர்ந்திடத் தூண்டும் ஆவலையூட்டுவனவாயும் அமைந்துள்ளன.


பாவேந்தர் பாரதிதாசன்

'...... வானூர்திமேலிருந்து
வல்ல தமிழிசைஞன்
தானூதும்
வேய்ங்குழலோ!'

என வானம் பாடியின் குரலுக்கு; தமிழிசைஞனின் குழலோசைக்கு ஒப்பிட்டு நோக்குவதையும் காண்கிறோம். உளம் பூரிக்கிறோம்.

### தமிழ்—அழகு

தமிழின் சுவையை இவ்வாறெல்லாம் இயம்பியவர்; அதன் அழகினை விவரிக்கும் பாங்கைப் பாருங்கள்.

ஆமாம்; சிறுகை நீட்டி; மழலை வாய் சிந்தத் தவழ்ந்திடும் ஓர் குழந்தையின் அழகே தமிழ் அழகு என்கிறார் அவர்.

'அளிதமிழ் உயிர்பெற்றங்கே
அழகொடும் அசையும்
பச்சைக்
கிளியினைக் காணப்
பெற்றான்'

என்பது அவர்வாக்கு.

இங்கு தமிழ் உயிர்பெற்று அசைந்து வருவது போன்று பச்சைக் குழந்தை வருவதை உணர்கிறோமல்லவா...?

'தழைத்த மயிலே கூத்தே வாழ்க!' என வரும் வரியில் (இளைஞர் இலக் — தமிழ் வாழ்த்து) கூத்தாடும் மயிலின் அழகுக்கு ஈடான தமிழே நீவாழ்க! என வாழ்த்தும் குரலைக் கேட்கிறோம்.

அழகும் தண்மையும் நிறைந்து பொலிவது வெண்ணிலா குழந்தைகளுக்கு விளையாட்டாகக் காட்டும் ஓர் எழிற் பொருளாக அது வானவீதியில் பவனி வருவதை

'அழ தூட்டும் தாயர்க்கு
கை கொடுத்து
வான் வெளியில்
[illegible]
[illegible] நீ'

என்கிறார் ஓர் கவிஞர்.

இந்த அம்புலியை குழந்தையொன்று அழைக்கிறதாம். எவ்வாறு தெரியுமா:...பைந்தமிழோடு பழகலாம்......... உனக்கு அதன் அழகும் தண்மையும் பிடித்திருக்கும் தயங்காது இறங்கிவா...... என்கிறது குழந்தை. அழகின் மீது ஒரு வித கவர்ச்சி உண்டு போலும்.

'பழகலாம் இறங்கு—நற்
பைந்தமிழுண்டிங்கு'
என்பது பாவேந்தர் கூற்று

### தமிழ்—உணர்வு

நறுஞ்சுவையும் அழகும் கொண்ட தமிழ் ஊட்டும் உணர்வினைப் பாடவந்தவர்;

'தெள்ளத் தெளிந்த
நீர்போல்
செழுந் தமிழ்ப் பொருள்
தெஞ்சப்
பள்ளத்தில் கோடைத
துன்பம்
பறந்திடப் பாய்ச்சி
விட்டான்.'

என்னும் வரிகளில், தெளிந்த நீர் கோடைத்துன்பமாகிய தாகத்தைத் தீர்ப்பது போன்று செழுந்தமிழின

**சர்வசித்தன்**

பொருள் உணர்வே என் நெஞ்சத்தின் துன்பமனைத்தையும் போக்கடித்து விட்டது என்கிறார்.

'மங்கை ஒருத்தி
தருஞ்சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க்கு ஈடில்லை
என்றுரைப்போம்'

என மங்கைதரும் சுகமும் எமது தமிழ் அளிக்கும் சுகத்திற்கு ஈடிலலை எனத் தமிழ் உணர்வினையே ஒரு படி மேலாக மதிக்கிறார் அவர்.

'தமிழ் நலம் மனத்தால்
உண்பார்
விழி ஒன்றிற் சார்வதில்லை'

'தமிழன் என்று நீ
சாற்றடா தம்பி'

'தமிழரின் தமிழ்க் குழந்தை
தமிழ்ப் பெயர் பெறுதல்
வேண்டும்'

என்னும் இப்பாடல் வரிகளும் அவரது தமிழுணர்வினைப் பறைசாற்றி நிற்பனவாகும்:

### தமிழ் ஏற்றம் பெற

'நினைவரும்படி இல்லார்க்கும் திருநல்கும் தமிழ்' 'பெருநிலத்தில் நற்றமிழர் வாழ்வு பிறரால் அருவருக்கலானதெனக்' கண்டபோது;

'சேர்த்த சிறை பெனக்கோ!
தென்றல் வரும்
சோலையன்றோ!
சிர்த்தித் தமிழர்க்குத்
தீமை வரப் பார்த்திரேன்!"

எனக் குமுறும் உள்ளத்தோடு போர்க்குரல் எழுப்பும் கவிஞர் எம்முன் காட்சி தருகிறார்.

"தமிழரென்று சொல்லிக்
கொள்கிறோம் நாமும்
தமிழ் நாட்டின்முன்னேற்றம்
விரும்புகின்றோம்
எமதென்று சொல்கின்றோம்
நாடொறுந்தான்
எப்போது தமிழனுக்குக்
கையாலான
எமதுழைப்பை ஒரு காசைச்
செலவு செய்தோம்"

என்று எமது கையாலாகாத்தனத்தை இடித்துரைப்பதையும்,

'முத்தமிழ் அன்னாய்
முழுதும் நாங்கள்
ஒத்து வாழ்ந்தால்
உனக்கும் நல்லது
செத்துக்கிடக்கும்
எமக்கும் நல்லது'

என எமது ஒற்றுமைக்காகக் குரல் கொடுப்பதையும்

'தமிழரின் மேன்மையை
இகழ்ந்தவனை என்
தாய் தடுத்தாலும் விடேன்'

என; வீராவேசத்தோடு புறப்படும் கவிஞரையும் நாம் காணமுடிகிறது.

இவையனைத்தையும் வாசிப்பவர்கள் பாரதிதாசன் தமிழை மட்டுமே பாடினார் என்று எண்ணிட வேண்டா. 'புதியதோர் உலகம்' சமைத்திடத் தேவையான அனைத்தையுமே அவர் பாடிச் சென்றிருக்கிறார்; அவையனைத்தையும் இச்சிறு கட்டுரையில் அடக்கிட முடியுமா......! என்ன?

இறுதியாக;

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று' சங்கு முழக்கிய அக்கவிஞருக்கு அஞ்சலி செய்து இதனை நிறைவு படுத்துகிறேன்.

வெல்க தமிழ்!

## தமிழணி இயக்கமும் எதிர்க்கும்!

புதிய அரசியல் திட்டம் சம்பந்தமாக பெரும்பான்மைத் தமிழ்த் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டு அரசாங்கம் திருத்தம் செய்த அரசியல் சட்டங்களையே அமுல்படுத்தவேண்டும். அவ்வாறன்றி அரசு பெரும்பான்மைத் தமிழ்த் தலைவர்களின் கருத்துக்களுக்குச் செவிகொடுக்காது தன்னிச்சையாக நடந்து, தமிழர்களை அனாதைகளாக்கும் அரசியல் திட்டத்தை அமுல்படுத்துமானால், எமது இயக்கமும் பெரும்பான்மைத் தமிழ்த் தலைவர்களின் பாதையிலேயே தீவிரமாகச் செயலாற்றும்."

இவ்வாறு குறிப்பிடும் தீர்மானமொன்றை இலங்கைத் தமிழணி இயக்கம் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளது, அத்துடன், தமிழர்களுக்குப் பாதகமான புதிய அரசியல் திட்டத்தில் எக்காரணம் கொண்டும் கையொப்பம் வைக்கவேண்டாம் எனக் கோரும் தீர்மானத்தையும், கல்குடாப் பா. உ. தவிர்ந்த ஏனைய எல்லாத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் மேற்படி இயக்கம் அனுப்பிவைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பேரரசு கண்ட இராச இராச சோழன்



தமிழர் பேரரசு அமைத்த இராச இராச சோழ மன்னனின் சிலையை அவனால் கட்டப்பட்ட தஞ்சை பிரகதீசுவரர் கோவிலில் வைக்க தமிழ்நாடு அரசு அனுமதி கேட்டதும் அதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க மறுத்ததும் தெரிந்ததே. பிரச்சினைக்குள்ளான இந்த இராச இராச சோழன் சிலையை தஞ்சையில் ஒரு பொது இடத்தில் சுமார் 2 இலட்சம் மக்கள் முன்னிலையில் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி திறந்துவைத்தார். அந்த மாமன்னனின் வரலாற்றை இக்கட்டுரையில் சிலம்புச் செல்வர் மா. பொ. சி. சுவைபட எழுதியுள்ளார்.

பாரதப்பெருநாடு கண்ட பேரரசர் பலராவர். அவர்களில், பிறப்பால்—பேசிய மொழியால் தமிழனாக விளங்கிய பேரரசன் இராசராச சோழனாவான்.

அந்நாளைய சாம்ராஜ்யங்கள் அரச மரபை யொட்டியே பெயர் பெற்றன: அவை, மௌரியர் சாம்ராஜ்யம், மொகலாயர் சாம்ராஜ்யம் என்பனவாம். அது போல, இராசராசன் சோழர் மரபினனாதலால், அவன் 'சோழ சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்டான். அவனது அரசு, 'சோழர் சாம்ராஜ்யம்' என்று அழைக்கப்பட்டது. ஆயினும், மௌரியர்—மொகலாயர் போல, இந்திய உபகண்டம் முழுவதையும் — ஏன், அதற்கப்பாலுள்ள பர்மா, இலங்கை, மலாயா ஆகிய நாடுகளையும் தன் கொற்றக் குடைக் கீழ் கொண்டு வந்து 'இந்திய சாம்ராஜ்யம்' ஒன்றைப் படைக்க விரும்பினான் இராசராசன்.

அவன் காலத்திலும், அவன் மகன் இராசேந்திரன் காலத்திலும் அந்த இந்திய சாம்ராஜ்யம் உருவாகி வந்தது; ஆனால், இராசேந்திரனுக்கப்புறம் அது விஸ்தரிக்கப்படவில்லை என்பதோடு, படைக்கப்பட்ட சாம்ராஜ்யமும் கரைந்து மறைந்தது. ஆம்; மௌரிய—மொகலாய சாம்ராஜ்யங்களுக்கு ஏற்பட்ட கதியே அந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இராசராசன் படைத்த சாம்ராஜ்யத்திற்கும் ஏற்பட்டது.

ஆயினும், சாம்ராஜ்யம் படைக்கும் திறன் தமிழனுக்கும் உண்டு என்பதைக் காட்டிய பெருமை இராச ராசனுக்கு உண்டு.

இராச ராசன், சோழ சாம்ராஜ்யம் படைக்க முயலாதிருந்தால், இந்திய உபகண்டத்திலோ' தமிழ் நாட்டிலோ ஜனநாயகம் தாண்டவமாடியிருக்கும் என்று யாரும் கருதவேண்டாம்;

அவன் வாழ்ந்த காலம் ஜனநாயக சகாப்தமன்று; சாம்ராஜ்ய சகாப்தம்! இதனை, சாம்ராஜ்ய எதிர்ப்பாளர்கள் மறத்தல் கூடாது.

இராசராசன் சோழ சாம்ராஜ்யம் படைத்திலனாயின், தமிழ் நாடு முழுவதையும் தன்னுள் கொண்டு தமிழரல்லாதாரான பல்லவர் சாம்ராஜ்யமோ, சாளுக்கியர் சாம்ராஜ்யமோ தென்னாடு முழுவதும் படர்ந்திருக்கும். அந்த நிலை தோன்றியிருந்தால் தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் என்ன ஆகியிருக்குமோ, யாரறிவார்? இந்த பேராபத்திலிருந்து தமிழினத்தைக் காத்தான் இராசராசன்.

இராசராசன், சமூகநெறியை விட, சமய நெறிகளுக்கே முதலிடந்தந்தான்; பார்ப்பன குருமார்கள் தமிழர் மீது தலைமை பெறச் செய்தான் என்று சொல்லப்படுகிறது; இது, அரை குறை உண்மைதான். முழு உண்மை அல்ல; அவன், சாம்ராஜ்ய சகாப்தத்தில் மட்டுமன்றி, சமய சகாப்தத்தில் வாழ்ந்தான். இராசராசன் பிறப்பதற்கு—அவனது சாம்ராஜ்யம் தோன்றுவதற்கு முன்பே தமிழ்நாடு சமய வாதிகளின் செல்வாக்கில் சென்று விட்டது;

சமண—பௌத்த சந்நியாசிகள் தமிழ் நாடு முழுவதையுமே சந்நியாசிகளின் மடமாக்கிவிட முயன்று கொண்டிருந்தனர். அவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு சைவ சமயக் குரவர்கள் தமிழ் நாட்டை சைவ மடமாக்கிவிட முயன்றனர்.

சிலப்பதிகாரக் காலத்தோடு 'தமிழன்' என்ற உணர்வு மறைந்து, சைவர்-வைணவர்—சமணர் -பௌத்தர் என்ற மத உணர்வுகள் தமிழ் மக்கள் மனங்களில் குடி புகுந்து விட்டன. ஆம்; தமிழினம் சமயக் கோடரியால் பல கூறுகப் பிளக்கப் பட்டுவிட்டது. இந்தக் காலத்தில் தான் இராச ராசன் தோன்றி சோழ சாம்ராஜ்யம் படைத்தான்.

நிலையில் விளைந்த நன்மை போல, இராசராசன் படைத்த சோழ சாம் ராஜ்யம், சமயங்களை ஏற்று, அவற்றினிடையே சமரசங் காண முயன்றது.

இராசராசன், பிறப்பால் தமிழனாதலால், தமிழருக்கே உரிய சைவ சமயத்தைப் பின்பற்றினான். ஆயினும், சமண—பௌத்த—வைணவ மதங்களிடமும் நல்லெண்ணம் காட்டினான். அந்த மதங்களைச் சார்ந்த மடங்களுக்கும் நில மான்யங்கள் கொடுத்தான்; ஆம்; மத நெறியை வளர்த்தான்; மத வெறியை மாய்த்தான்.

ஸ்ரீ விஜய (மலேயா, சுமத்ரா, மேற்கு ஜாவா அடங்கிய ராஜ்யம்) நாட்டு மன்னன், சோழ நாட்டு நாகப்பட்டினத்தில் சூடாமணி ஹாரம் என்ற பௌத்தக் கோவிலைக் கட்ட இராசராசன் அனுமதி தந்ததோடு, அக்கோவிலுக்குப் பல கிராமங்களை மானியமாகவும் கொடுத்தான்.

சைவ சமயக் குரவரான அப்பர் பெருமானைக் கல்லுடன் கட்டிக் கடலிலிட்ட—ஞான சம்பந்தர் தங்கிய மடத்தைக் கொளுத்திய சமய வெறித்தனம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் இல்லை யென்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இராசராசன் விளை நிலங்களைச் சாவே செய்து, சமய—சமூக சேவையில் ஈடுபட்டவர்களுக்கு ஏராளமான நிலங்களைத் தானம் வழங்கினான். அவ்வகையில், கோயில் குருமார்களும் விவசாயிகளாயினர். ஓதல், ஓதுவித்தல் தொழிலுக்குரிய அந்தண வகுப்பார், நிலவுடைமையாளர்களாக விளங்குவதனை இன்றும் சோழ நாட்டில்தான மிகுதி

## சிலம்புச் செல்வர் ம. பொ. சி

யாகக் காண்கின்றோம். வேறு மாவட்டங்களில் பிராமணர்களிலே பெரிய பெரிய மிராசுகளைக்காண இயலாது.

இதனால், மிராசு முறைக்கு வழி வகுத்தவன் இராசராசன் தான் என்று கூறப் படுகிறது: இது மிகையான குற்றச் சாட்டு.

இராச ராசன் காலத்தில் நிலமனைத்தும் அரசுக்குத் தான் சொந்தம். அரசு மக்களுக்குச் சொந்தம். அந்த வகையில் நிலமனைத்தும் தேசவுடைமையாக இருந்த தென்றே சொல்லலாம். சோழ அரசன், குருமார்களுக்கோ பிறருக்கோ மான்யமளித்தது, உழுது பயிர்செய்து கொள்ளத்தான்! பட்டா செய்து, உடமையாக்கிக் கொள்ள அல்ல. அதாவது, ஒருவித குத்தகைமுறைபோலத்தான் நிலமான்யம் தரப்பட்டது!

இராச ராசன், சாம்ராஜ்யச் சக்ரவர்த்திதான் என்றாலும் ஜனநாயகத்தின் விரோதி அல்ல. அவன் ஆட்சியிலே, பிறிதொரு ஆட்சியில் இல்லாத அளவில் ஜனநாயகம் இருந்தது சோழ நாட்டிலே! வாக்களித்து பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உரிமையிருந்தது.

ஒவ்வொரு கிராமமும் பஞ்சாயத்து ராஜ்யமாக இருந்தது. சுருங்கச் சொன்னால், இன்று நாம் மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருகிறோமல்லவா, அந்த சுயாட்சி அந்தஸ்து இராச ராசன் காலத்தில் கிராமங்களுக்கு இருந்ததெனலாம்.

இராசராசன், தமிழ் மொழியின் வரி வடிவத்தை மாற்றினான். இது, தமிழ் மொழிக்கு அவன் செய்த பிழையல்ல; பெருந்தொண்டு. பழைய வரி வடிவம் நீடித்திருந்தால், தமிழுக்கு தனித்தன்மை இருந்திருக்காது. புதிய வரி வடிவம் அழகியது; தமிழுக்கே உரியது. தமிழ் தனித்த மொழியாக விளங்குவதை விரும்பாதவர்கள், இராசராசனைக் குறை கூறலாம். பழைய வரி வடிவம் நிலைத்திருந்தால், தேவ நாகரிலிபியைக் கூட தமிழர் ஏற்றுக்கொள்வது சுலபமாகியிருக்கலாமோ, என்னமோ!

இராச ராசன் கி. பி. 985 முதல் 1014 வரை— தொடர்ந்து முப்பதாண்டு காலம்— சோழர் பேரரசின் பெருமன்னனாக விளங்கினான். இவனுக்குப் பின் இவனுடைய மைந்தன் இராசேந்திர சோழன், தொடர்ந்து முப்பதாண்டு காலம் சோழ அரசின் மாமன்னனாகத் திகழ்ந்தான்.

இராச ராசன், 'தஞ்சைப் பெரிய கோயில்' எனப்படும் பிரகதீசுவரர் கோயிலைக் கட்டுவித்தான். இது, அவன் செய்த அரிய சாதனையாகக் கருதப்படுகிறது. இவன், இறந்த பக்திமானாக விளங்கினான். பக்தி மதத்தைப் பரப்ப பெருமுயற்சி மேற்கொண்டான்.

இராச ராசன் வலிமை மிக்க கப்பற்படை வைத்திருந்தான். தன் கப்பற் படையைப் போருக்கு மட்டுமல்லாமல், ஜாவா, சுமத்ரா, மலாயா, சீனா ஆகிய அயல் நாடுகளுடன் வாணிபம் செய்யவும் பயன்படுத்தினான்.

கப்பற்படைத் துணை கொண்டு இலங்கையின் வட பகுதியைக் கைப்பற்றி, பொலனறுவாவைத் தலைநகராக்கி, அதனைத் தமிழகத்தோடு இணைத்து வைத்தான். இவனுக்குப் பின் இராசேந்திர சோழன் இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றினான்.

கன்னட நாட்டின் பகுதிகளான கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி ஆகியவை சோழர் பேரரசில் சேர்க்கப்பட்டன. வேங்கி நாட்டின் மீதும் மேலாதிக்கம் பெற்றான்.

இவ்வளவு சாதனைகளை இராச ராசன் புரிந்திருப்பதால்தான் அவனது ஆட்சிக் காலத்தைத் ''தமிழரின் பொற்காலம்'' என்று கூறிப் புகழ்கின்றனர், வரலாற்றாசிரியர்கள்;

# அரசியல் சாசனத்தில் கையொப்பமிடாதீர்! வல்வை மக்களும் கோருகின்றனர்!

"நாடு குடியரசானதை முன்னிட்டு அரசியல் அமைப்புக்கு வழிகாட்டியாக 38 அடிப்படைத் தீர்மானங்கள் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டன. அதில் பௌத்தமதம் அரசாங்கத்தினால் பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய மதமாகவும் ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் புறக்கணித்து ஒதுக்கப்பட்ட மதங்களாகவும் இருக்கும். ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாம்தரப் பிரஜைகள் என்பதுவேயாகும்.

தனிச் சிங்கள சட்டம் அரசமைப்பில் ஓர் அங்கமாகும். 1956ம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களால் ஏகோபித்து எதிர்க்கப்பட்ட இச் சட்டம் வருங்காலத்தில் எவ்வித மாற்றமும் பெறுவதற்கு இடமில்லாத வகையில் அரசியற் சட்டத்தில் இடம்பெறப்போகின்றது. 1958ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி உபயோகச் சட்டம் அதன்கீழ் சட்டவிதிகள் ஆக்கப்படாவிட்டால் நடைமுறைக்கு வரமுடியாத சட்டமாகும். 1966ம் ஆண்டு தமிழ் பா. உ.க்களின் வற்புறுத்தலினால் ஆக்கப்பட்ட சட்ட விதிகளையும் இல்லாமல் செய்கின்றது. தமிழ் மொழி உபயோக சட்டத்தைப் பற்றி அரசியற் சட்டத்தில் திட்டவட்டமாக கூறப்படவில்லை.

இலங்கையில் எப்பகுதியிலும் சிங்களமே நீதிநிர்வாக மொழியாக விதிக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிய தேசிய சபை விரும்பினால் வேறு ஒழுங்குகள் செய்யலாம் என்பதைத்தவிர (அதிலும் தமிழில் செய்யலாம்) தமிழ்மொழி என்பதை புகுத்த விரும்பவில்லை. பதிவேடுகள் தமிழில் வைத்திருப்பதற்குஎவ்வித இடமுமளிக்கப் படவில்லை. தேசிய சபை விரும்பி வேறு சட்டத்தை இயற்றுவிட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களமே நீதி மன்றங்களின் பதிவுமொழியாக இருக்கும். குடியுரிமை பற்றி எதுவும் கூறப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் நாடற்ற மக்களாகவும் சந்தேகப்பிரஜைகளாகவும் அல்லலுறுவர். மேலும் சாதியினால் குறைந்தவர்களின் உரிமைக்கு பாதுகாப்பளிக்கக்கூடிய வசதியில்லை.

மேலும் இன்றைய பாராளுமன்றந்தான் வருங்கால

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி தமிழ் செய்தித் திரட்டும் ஆண்டறிக்கையும்

இலங்கை மத்திய வங்கித் தமிழ்ச் செய்தித்திரட்டு பொருளாதார, நிதி விடயங்கள், புள்ளிவிவரங்கள், கருத்துரைகள், அடங்கிய ஒரு மாதாந்த வெளியீடாகும். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்பிலுள்ள இச்செய்தித்திரட்டு, பணியாளர் ஆசிரியக் குழுவின் மேற்பார்வையின்கீழ் வெளியிடப்படுகின்றது.

தமிழ் ஆண்டறிக்கையும் இத்திங்கள் 25ம் நாள் வெளியிடப்படுகின்றது.

இவற்றின் உள்ளூர் 'ஆண்டுக் கட்டணம் ரூ. 20/- என்றும் தனிப்பிரதி ஒவ்வொன்றும் ரூ. 2/ என்றும் அறியக்கிடக்கிறது.

மேற்குறித்த வெளியீட்டிற்கு ஆண்டுக் கட்டணம் செலுத்துவோர் மத்திய வங்கி தமிழில் வெளியிடும் ஆண்டறிக்கையையும் பெறுகின்றனர் என்றும் அறிகின்றோம். தமிழிற் பொருளியற் சொல்வளம் பெருக்கவும், தமிழ் மாணவர்கள் பொருளியல் அறிவுபெறவும் தமிழ்ப் பொதுமக்களும்வணிகர்களும் நாட்டின் பொருளாதாரநிலையை மாதந்தோறும் நன்முறையில் அறியவும் துணைபுரியும் இவ்வெளியீடுகளுக்கு தமிழ் மக்கள் நல் ஆதரவு காட்டுதல் பயன்பல அளிக்கும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி—

பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இராணி வீதி, கொழும்பு-1.

——

## மிரட்டல்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற இன்னும் பல அறிஞர்கள், கலவிமான்கள் ஆகியோரும் எதிர்க்கின்றனர். நூற்றுக்கு 99% மக்களும் இத்திட்டத்தை எதிர்க்கின்றார்கள்.

மற்றைய மதங்களின்வரிப் பணத்தைக் கொண்டு பௌத்த மதத்தை வளர்ப்பதற்கு வழிவகுக்கின்றது. மதம் அபின் என்று முன்பு கூறிய கொல்வின் ஆர். டி. சில்வா இன்று பௌத்தம் என்ற அபினை ஏனைய மதத்தினருக்கும் ஊட்டுவதற்கு வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறார். ஆகவே கடைசித் தமிழன் இந்நாட்டில் உயிருடன் இருக்கும் வரை முழு மூச்சுடன் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று கூறினார்.

——

## இனவிடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்தும் வேலை நீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள்-

"தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்தேர்ச்சியில்லாத காரணத்துக்காக சீட்டுக் கிழிக்கப்படுகிறது!

"இ. போ.ச போன்ற அரசாங்க ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்கள் மீது தனிச் சிங்களம் வலிந்து திணிக்கப்படுகிறது!

இதுபோன்று தமிழ்தேசிய இனம் பல வழிகளில் அடக்கி ஒடுக்கி, ஒதுக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து மீட்சி பெற சுயாட்சித்தமிழரசு அமைப்பதே ஒரே வழி. அதற்கு அறவழியில் போராட தமிழ்பேசும் மக்கள் தயாராக இருக்குமாறு வேண்டுகிறேன்."

## ஒண்ணும் புரியவில்லை தம்பீ...!

ஓராண்டு கால தடுப்புக் காவலின் பின் அண்மையில் விடுதலை செய்யப்பட்டவாசு தேவநாணயக்கார சமசமாஜக்கட்சியின் ஓர் உறுப்பினர்.

சமசமாசக் கட்சி அரசங்காத்திலுள்ள இரண்டாவது பெரிய கட்சி: சமசமாஜக் கட்சியின் இரு முக்கிய தலைவர்கள் அமைச்சரவையிலும் இருக்கிறார்கள்.

எனவே வாசுதேவ நாணயக்காராவும் ஓர் அரசாங்கக் கட்சி உறுப்பினர். பயங்கரவாத சம்பவங்களை யடுத்து ஓராண்டு சிறையில் இவரை அடைத்து வைத்திருந்தது இவரது கட்சியையும் கொண்ட அரசாங்கமே!

நாணயக்கார சிறையிலிருந்து வெளியே வந்த போது அவரை மாலையிட்டு அழைத்துச் சென்றவர்களில் அமைச்சர் கொல்வினும் ஒருவர்!

அரசாங்கக் கட்சியில் அதாவது சமசமாஜக் கட்சியிலேயே தொடர்ந்தும் இருந்து வருகிறார் நாணயக்காரா! என். எம். பெரேராவும் இவரோடு நெருங்கி அளவளாவுகிறார்!

அப்படியானால்...?

ஒண்ணும் புரியவில்லைத் தம்பீ...!

## குற்றவிசாரணை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் எதிராக இயங்குவது இது முதல் தடவையல்ல என்றும், தனி இனப் பிரகடனம் கேட்டு அவர் அறிக்கை விட்டபோதே அவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்றும், அவர்மீது விசாரணை செய்து முடிவுகள் வரும் வரை அவர் கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்படவேண்டும் என்றும், இக் கூட்டத்தில் அவர் பங்குபற்ற கூடாது எனவும் கேட்டார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய கட்சி அமைப்பாளர் திரு. ஏ. வைத்திலிங்கம் அவர்கள் திரு. எம். சி. சுப்பிரமணியம்குற்றவிசாரணைக் கமிஷன் மசோதாவுக்கு ஆதரவாக வோட்டளிக்க வேண்டும் என கட்சியின் யாழ் மாவட்டக் குழு தீர்மானித்தது என்றும் அம் முடிவின் படியே அவர் நடந்திருப்பதால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னார்.

அப்பொழுது ஒரு கட்சி அங்கத்தவர் பின்வருமாறு திரு. வைத்திலிங்கத்தை நோக்கிக் கேட்டார்:.

"கொழும்பில் நடந்த மத்திய கமிட்டிக் கூட்டத்தில் எம். சி. சுப்பிரமணியத்தை இம் மசோதாவுக்கு எதிராக வாக்களிக்கும்படி வேண்டியிருக்கிறோம. அவரும் அப்படியே உறுதி அளித்திருக்கிறார் என்று சொன்னீர்கள் அங்கேயொன்று, இங்கேயொன்றாக விளக்கம் கொடுத்து இரட்டைவேடம் போடுகிறீர்கள். அற்பசலுகைகளுக்காக தமிழ் மக்களையும் உழைக்கும் வர்க்கத்தையும் காட்டிக்கொடுத்து வந்த நீங்கள் இன்று கட்சியையே காட்டிக்கொடுக்கிறீர்கள்."

இக் கூட்டம் முடிவடைந்த பின்னர் கல்வாரித் தொகுதி

## மதுரையில் நெடுஞ்செழியன் சிலை!

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மதுரையை ஆண்டமாமன்னன் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு சிலை நிறுவப்பட இருப்பதாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

மாமன்னன் இராசஇராசசோழனின் சிலை தஞ்சைத்தரணியில் புத்தாண்டு தினத்தன்று தமிழக முதல்வரால் திறந்துவைக்கப்பட்டது. இரண்டு இலட்சம் மக்கள் இச்சிலைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

## அரசியல் சட்டத்துக்கு கருநாவல் பற்று தெற்கு கிராம சபை எதிர்ப்பு!

இலங்கையைக் குடியரசாக்கும் பொருட்டு நிறைவேற்றப்படவிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டம் சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக தமிழ் பேசும் இனத்துக்கு, அவர்களின் மொழி, சமயம், கலை கலாச்சாரம் ஆகியவற்றுக்கு எவ்வித பாதுகாப்பும் அளிக்காமையால் அவ்வரசியல்த்திட்டத்தைத் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களோ தமிழ் அரசியல் கட்சிகளோ ஏற்றுக்கொள்வல் ஆகாது என கருநாவல் பற்று தெற்கு (ஒலுமடு) கிராமச்சபை ஒரு பொதுத் தீர்மானம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஒரு நாட்டில் வாழும் சகல இன மக்களும் அந்த நாடு தமது என்று இறுமாப்பு எய்துவதற்கு மூலகாரணம் சகல இன மக்களும் சமமான உரிமை பெறுவதேயாகும். ஒரு பகுதியினரின் மொழி, மதம், கலை, கலாச்சாரம் மட்டும் பாதுகாக்கப்பட்டு மற்றைய இனங்கள் புறக்கணிக்கப்படின் அந்த இனம் நாட்டின் இரண்டாம் தரப் பிரசைகள் ஆவதோடு உரிமைகளையும் இழந்து விட்டவர்களாவர். ஆதலின் தமிழ் இனத்தினை பூண்டோடு அழிக்கும் இப்புதிய அரசியல் திட்டத்தினை ஏற்கவேண்டாமென திரு. இ. இராமலிங்கம் முன்மொழிய திரு. மு. தம்பிஐயா வழிமொழிந்தார். கிராமச்சபை தலைவர் திரு. வே. கந்தசாமி தலைமையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

——

### கருநாவல்பற்று தெற்கு கிராம சபை தீர்மானம்

"இலங்கையைக் குடியரசாக்கும் பொருட்டு நிறைவேற்றப் படவிருக்கும் அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மையினருக்கு, குறிப்பாக தமிழ்ப்பேசும் இனத்துக்கு அவர்களின் மொழி, சமயம், கலை கலாச்சாரம் ஆகியவற்றுக்கு எவ்வித பாதுகாப்பும் அளிக்காமையால், அவ்வரசியல் திட்டத்தைத் தமிழ்ப்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசியற் கட்சிகளோ ஏற்றுக் கையொப்பமிடல் கூடாதென இச்சபை அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது" என திரு. இ. இராமலிங்கம் அவர்கள் முன்மொழிய திரு. மு. தம்பிஐயா அவர்கள் வழிமொழிய சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

கிளையைச் சேர்ந்த நாலு அங்கத்தவர்கள் கட்சி அமைப்பாளர் ஏ. வைத்திலிங்கம் அவர்களால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

# வந்தது மேதினம்!

—கொற்றை பி. கிருஷ்ணனந்தன்—

நாங்களின் இல்லையேல் நாட்டினில் ஒன்றும்  
நடந்திடப் போவதில்லை -பூமி  
சிறந்திடப் போவதில்லை—செல்வம்  
தேங்கி வளர்ந்துமே தேசம் உயர்ந்திட  
மாடுபோல் நாமுழைத்தோம்—ஆனால்  
ஓடுபோல் ஆகிவிட்டோம்!

காலை முதற்கொண்டு மாலை வரையிலும்  
கஷ்டப்பட் டேயுழைத்தும்—உங்கள்  
இஷ்டப்படி நடத்தும்—பெரும்  
வேலைகள் செய்திட்ட போதிலும் எங்களின்  
வாழ்க்கையில் இன்பமில்லை—இதைக்  
கேட்கவும் ஆட்களில்லை!

எங்களின் வாழ்க்கையில் இன்பம் சொரிந்துநல்  
ஏற்றம் கிடைத்திடவும்—எங்கள்  
வாட்டம் துடைத்திடவும்—தொல்லை  
மங்கி அழிந்திட மகிழ்ச்சியும் பொங்கிட  
வந்தது மேதினமே—இன்பம்  
தந்தது மேதினமே!

உழைத்திடும் மக்கள்நாம் உவகை அடைந்திடும்  
உன்னத நாளிதுவே—கொடும்  
இன்னல்கள் தீர்ந்திடுமே—நாம்  
செழித்திடும் வாழ்வினைப் பெற்றிட வேண்டுமென்  
றெண்ணிக் களித்திடுவோம்—தீமை  
மண்ணில் அழித்திடுவோம்!

## நபிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலை கலங்கினலும் நிலை கலங்காத எம்பெருமானார் (ஸல்) அவர்கள் 'ஏற்ற தொரு நற்கருத்தை என்னுள்ளம் ஏற்றால் நில்லேன், அஞ்சேன், தொடர்ந்து செல்வேன்' எனச் சபதம் பூண்டார்கள். புனிதமான இஸ்லாம் மார்க்கத்தை வளர்க அவர்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம். சிலசமயம் யாபெரும் யுத்தத்தின்போது தங்களது புனிதமான ஒரு பல்லைக் கூட இழந்தார்கள் நாயகம் (ஸல்) அவர்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்த மகாத்மா காந்தி கூட" நாயகம் ஒரு பெரிய தீர்க்கதரிசி. அவர்கள் அனுபவித்த துன்பங்களை நான் படித்த வேளையில் கண்ணீர் வடித்தேன். வாய் விட்டு அழுதுவிட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்;

பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்வும் வாக்கும் உலகம் உள்ளளவும் அத்தியாவசியமானவைகளேயாகும்.

வஸ்ஸலாம்.

### குண்டசாலேயில் முருகன் ஆலயம்

குண்டசாலை விவசாயக் கல்லூரி மாணவரின் நெடுநாளைய வாஞ்சையினை முருகப் பெருமானிற்கு ஓர் ஆலயம் அமைக்க 10.2.72 அன்று காலை 6 மணியளவில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகிய பூஜை நிகழ்ச்சிகள் கண்டி விநாயகர் ஆலயக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. கணேசசுந்தரம் அவர்கள் தித்திக்கும் தேன் தமிழில் தேவாரங்கள் பாடி, சொற்பொழிவாற்றி நிகழ்ச்சியினைச் சிறப்பித்தார்.

## சோசலிசமாம் சோசலிசம்..!

இம் மாதம் 22ம் திகதி யன்று இலங்கை மருத்துவச் சபையினரால் (Ceylon Madical Council) நடாத்தப் பெற்ற, மருத்துக்கலைவயாளர் பயிற்சித் தெரிவுக்கு, நடைபெற்ற பரீட்சைக்கு 76 மாணவர்கள் சிங்கள மொழியிலும் 50 மாணவர்கள் ஆங்கிலத்திலும், 280 மாணவர்கள் தமிழ்மொழியிலும் தோற்றினார்கள். ஆங்கிலமொழியில் தோற்றியவர்களிலும் தமிழரே பெரும்பான்மையினர் என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழ் மாணவர்கள் அதிகமாகத் தோற்றும் இப்பரீட்சைக்கு, தமிழ் மொழியிலே பதில் எழுதப்போகும் பரீட்சைக்கு, நேர குறிப்பும் ஏனைய விபரங்களும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரம் தான் அனுப்பப்பட்டுள்ளன. தமிழ் மாணவரது மேல் விலாசங்கள் அனைத்தும் சிங்களத்திலேயே எழுதப்பட்டிருந்தன;

'வெள்ளைக்காரன் போனபின் ஆங்கிலம் தேவையில்லை; 'ஆங்கிலத்தின் இடம் சிங்களத்திற்கும் தமிழிற்கும் தான்' என்று கூறிய, கூறிக்கொண்டு வருகின்ற முற்போக்கு வாதிகளே இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

இதுதான் நீங்கள் காட்டும் சோசலிசப் பாதையா?

(இரகு ஸ்ரீ)

அண்ணாவின்  
தமிழ் நாடு கண்டேன்  
தொடர் கட்டுரை  
அடுத்த வாரம் இடம்பெறும்

—ஆர்

அருள் விருந்து

"கட்டுப்பாடான வாழ்க்கையின் மூலமாகவன்றி ஒருவன் மேலோன் ஆக முடியாது."

—தர்மசக்கரம்.

மில்க் வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை  
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவீர் இந்த நாட்டிலே

தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்த சிங்களத் தாயின் தத்துப் பிள்ளைகள் என்று எண்ணிக் கொள்ளும் (உண்மையில் சிங்கள இனத்தின் அடிமைகளாகிய) சிங்கள ஐக்கியமுன்னணி அரசின் அடிவருடிகளே; தமிழ்த்தாயின் உரிமைகளைத் தமிழரசுக்கட்சி கோரும் முறை பிழையென்று மேடை தோறும் முழங்குகின்றீர்களே! ஏடுதோறும் எழுதுகின்றீர்களே—தமிழரசுக்கட்சி தமிழினத்தின் பிரதிநிதித்துவக் கட்சியல்லவென்றும் புலம்புகின்றீர்களே அப்படியானால் தமிழினத்தின் உத்தியோகப் பற்றின்றிய பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் உங்களுடைய கட்சிகளின் ஆட்சியில் தமிழினத்திற்குரிய உரிமைகளை (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கியப்படுவதற்கு முன் நீங்கள் தமிழினத்திற்காகக் கோரிய உரிமைகளை) வழங்கினாலென்ன? அப்படி வழங்கி விட்டீர்களானால் தமிழரசுக் கட்சியை ஒழித்துக்கட்ட நீங்கள் காணும் கனவு ஒருவேளை நனவாகலாமல்லவா?

தமிழினமும், சிங்கள இனமும் சகோதர ஐக்கியத்துடன் வாழ்வதுதான் ஐக்கிய முன்னணி அரசின் இலட்சியமென வாய்கிழியக் கத்தும் ஐக்கியமுன்னணியினரே அப்படியானால் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை ஐ. நா. சாசனத்தின்படி வழங்காமல் ஏன் பறிக்கிறீர்கள். ஒருஇனம் ஆளும் இனமாகவும், மற்றொரு இனம் ஆளப்படுமினமாகவும் இருக்கும்போது சகோதர ஐக்கியம் ஏற்பட முடியுமென்று நம்புகிறீர்களா?

### சுதந்திரம் என்றால் என்ன?

சுதந்திரம் என்றால் என்ன? ஒரு இனத்தின் சம்மதமின்றி மற்றொரு இனம் ஆக்குகின்ற சட்டங்களுக்கு அடங்கி வாழுகின்ற இனத்தைச் சுதந்திர இனமென்று கூற முடியுமா? வளமிக்க மொழியுள்ள ஒரு இனம் மற்றொரு இனத்தின் மொழியினால் ஆளப்படும் போது, அவ்வாறு ஆளப்படுமினத்தைச் சுதந்திர இனமென்று கூற முடியுமா? தனக்கென்ற ஒரு பாரம்பரிய மாநிலத்தில் பெரும்பான்மையாக வாழுகின்ற ஒரு இனத்தை மற்றொரு மாநிலத்தில் வாழுகின்ற வேறொரு இனத்துடன் ஒப்பிட்டு முந்திய இனத்தைச் சிறுபான்மையினமென்று சொல்லமுடியுமா?

ஒரு இனத்தின் தனியுரிமையான மாநிலத்தில் மற்றொரு மாநிலத்தில் வாழும் மக்கள் சட்டத்தின் துணையுடன் பெரும்பான்மையாக வந்து குடியேறி அந்த மாநிலத்திற்குரிய இனத்தைச் சிறுபான்மையினமாக்கும் இனக்கொலைத் திட்டத்தைப் பார்த்துக்கொண்டு அதை ஏனென்று கேட்காது இருக்கும் இனத்தைச் சுதந்திர இனமென்று கூறமுடியுமா?

**யாழ்வேந்தன்**

ஆட்சியாளரிடமிருந்து வரும் ஒரு கடிதத்தின் மூலப்பிரதி அந்நிய மொழியிலும் அதன் அதிகாரபூர்வமற்ற மொழிபெயர்ப்பைத் தனது மொழியிலும் பெறச் சலுகை கேட்கும் ஒரு இனத்தைச் சுதந்திர இனமென்று கூறமுடியுமா?

### நெஞ்சில் கை வைத்து சொல்லுங்கள்

மேற் கூறியவற்றில் ஏதாவதொரு உரிமைதானும் தமிழினத்திற்கு இருக்கிறதா? ஐக்கிய முன்னணி அரசின் தோழர்களே உங்கள் நெஞ்சில் கைவைத்துக் கூறுங்கள் பார்ப்போம். இந்த உரிமைகள் எதுவுமேயற்ற ஈழம் வாழ் தமிழினத்தைச் சுதந்திர இனமென்று இயம்ப முடியுமா? தமிழினத்தை அடிமைகொண்டிருந்த ஆங்கிலேயர் அந்த அடிமைச் சாசனத்தைச் சிங்கள இனத்திற்கு மாற்றிக்கொடுத்து தமிழினத்தைச் சிங்கள இனத்திற்கு அடிமையாக விற்றிருக்கிறார்களே தவிர தமிழினத்திற்குச் சுதந்திரம் வழங்கவில்லை. இந்த நிலையில் தமிழினம் தன்னை ஒரு சுதந்திர இனமென்று சொல்லிக்கொள்வது கேலிக்கிடமானதில்லையா?

### இருட்குகை

ஆங்கிலேயர் தந்த ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தைக் கிழித்தெறிந்து விட்டுப் புதிய அரசியல் சாசனம் ஒன்றை ஆக்குகின்ற இந்த வேளையிலாவது தமிழினத்திற்கு விடுதலை கிடைக்கின்றதா? இல்லையே!

சோல்பரி அரசியல் சாசனத்தின் கீழ் திறந்தவெளிச் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த தமிழினத்தைச் சிறீலங்கா அரசியல் சாசனம் காற்றுப்புக முடியாத இருட்குகையில் சிறைவைக்கப் போகின்றதே! இந்த இருட்குகையில் அடைபட்டால் தமிழினம் உயிர் பிழைக்க முடியுமா? தமிழினத்தைச் சவக்குழிக்குள் தள்ளப்போகும் இந்த அரசியல் சாசனத்தைப்போ தமிழினம் வேளதாளங்களுடனும், காவடி அரசங்களுடனும் வரவேற்க வேண்டுமென்று கூறுகிறீர்கள் தோழர்களே! கண்ணில்லாத (பதவிமோகமென்னும் பசாசு கண்ணை மறைத்துவிட்ட) அரசியல் குருடர்களாகிய ஐக்கிய முன்னணி அரசின் அடிவருடிகளாகிய நீங்கள் தானா தமிழினத்திற்கு வழிகாட்டப் போகின்றீர்கள்! அரசியல் அந்தகர்களாகிய உங்கள் பின்னால் வந்து அடிமைப்படுகுழியில் விழுந்து மாழ விழிப்புற்ற தமிழினம் தயாராயில்லையென்பதை உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

### பொம்மலாட்டம்

திரைமறைவிலிருந்து நூலை ஆட்ட நாட்டியமாடும்பொம்மலாட்டக்காரனின் பொம்மைகள் போல சிங்கள அரசினர் பதவிமோகமென்னும் நூலால் கட்டியாட்ட ஆடுகின்ற பொம்மைகளாகிய அமைச்சர் குமாரசூரியரே, வி(த்தகர்) பொன்னம்பலமே! மும்மூர்த்திகளே! துரோகப்பாவே! உங்களைத் தமிழ் மக்கள் இன்னும் அடையாளம் காணவில்லையென்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள். ஏமாந்த சோணகிரிகளே விடுதலை வேட்கை கொண்ட தமிழினத்தை இனியும் ஏமாற்றலாம் என்று கனவு காணுகிறீர்கள்!

### முதலைக் கண்ணீர்

இன்று சுதந்திர வங்காள தேசத்திற்கு வாழ்த்துப் பாடும் தோழர் வி. பொன்னம்பலமே! வங்க மக்கள் சுதந்திர வேட்கை கொண்டெழுந்தபோது பாகிஸ்தான் ஏகாதிபத்தியவாதிகள் வங்க மக்களைக் கொன்று குவித்தார்களே! கன்னிப் பெண்களைக் கற்பழித்தார்களே அப்பொழுது நீரும் உமது கட்சியினரும் எங்கேயிருந்தீர்கள் தோழரே! ஆளும் கட்சியின் முந்தானைக்குள் பதுங்கியிருந்தீர்களா?

வங்க மக்கள் விடுதலைப் போர் தொடங்கிய அன்றே தமிழரசுக்கட்சி தனது தார்மீக ஆதரவை அம்மக்களுக்குத் தந்தது. வங்க மக்கள் விடுதலை பெற்றதும் அதற்காக வெற்றி விழாக் கொண்டாடியது தமிழரசுக்கட்சி. இன்றும் தனது ஆதரவை அம்மக்களுக்கு வழங்கிக் கொண்டேயிருக்கிறது தமிழரசுக்கட்சி. வங்க மக்களுக்காக இலங்கையில் குரல் கொடுத்த ஒரே கட்சி தமிழரசுக்கட்சிதான் என்பதைத் தமிழ் மக்களும், வங்க மக்களும் அறிவார்கள்; வங்க மக்களின் விடுதலைப் போராட்ட விபரங்களைத் தேசியத் தினசரிகள் எல்லாம் இருட்டடிப்புச் செய்த வேளையில் உள்ளது உள்ளபடி வெளியிட்ட செய்தித்தாள் சுதந்திரனே! இவற்றை ஐக்கிய முன்னணியின் அடிவருடிகளாகிய நீங்கள் அறியாமலிருக்கலாம் அல்லது அறியாதவர்கள் போல் பாசாங்கு செய்யலாம். ஆனால் தமிழினம் நன்றாக அறிந்திருக்கிறது. ஆகையால் தமிழரசுக் கட்சி தவறான முறையில் வங்க விடுதலை வரலாற்றைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுகிறதென்ற உங்களுடைய கூற்று ஆதாரமற்றதென்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

### அடிமையாக வாழவேண்டுமா?

வங்க மக்களின் மொழியுரிமை மறுக்கப்பட்டதால் தான் அவர்களின் விடுதலைப் போர் ஆரம்பித்ததென்பதை நீங்களும் ஒப்புக்கொண்டு விட்டீர்கள். பாகிஸ்தானில் வங்க மக்கள் பெரும்பான்மையினர் ஆகையால் அவர்கள் மொழியுரிமைக்குப் போராடி விடுதலை பெற்றது சரியென ஒப்புக்கொள்கிறீர்! பொன்னம்பலம் அவர்களே! அப்படியானால் எண்ணிக்கையில் குறைந்த ஒரு இனம் ஒரு மாநிலத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் எண்ணிக்கையில் அதிகமான மற்றொரு மாநிலத்தில் வாழும மக்களுக்கு அடிமையாக வாழவேண்டுமென்று கூறுகிறீரா? அப்படியானால் சோவியத் நாட்டின் கொம்யூனிச சித்தாந்தத்தை நீர் பின்பற்றுவதாகக் கூறுவது பொய்யா?

சோவியத் நாட்டில் மிகச் சிறிய சிறுபான்மையினத்திற்கும் சமஷ்டிக்குட்பட்ட மாநில சுயாட்சி வழங்கி அவர்களின் மொழி, இன உரிமை பேணப்பட்டிருப்பதைப், பல தடவை சோவியத் ருசியாவிற்குப் போய் வந்த தாங்கள் அறியாதது விந்தையிலும், விந்தையாக இருக்கிறதே! இலங்கையில் தமிழினம் சிங்கள இனத்துடன் சிதறிக்கலந்து சிறுபான்மையினமாக இருக்கவில்லையே. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களிலே இரண்டு மாகாணங்களில் பெரும்பான்மையாகத் தனித்துவத்துடன் வாழ்வதை நீர் அறியவில்லையா? அதுமட்டுமா? ஆங்கிலேயர் இந்நாட்டை அடிமை கொள்வதற்கு முன் இலங்கையில் தனித்தனி சிங்கள, தமிழ் அரசுகள் இருந்ததை நீர் அறியவில்லையா? பெரும்பான்மையினத்தின் மொழியுரிமை பேணப்படவேண்டுமென்ற உமது கோட்பாட்டின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும தமிழ மக்களின் உரிமை பேணப்பட வேண்டுமென்பதை நீர் ஒப்புக்கொள்ளுகின்றீர்தானே! கொள்கையில நீர உறுதியுள்ளவராயிருந்தால் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வீர். ஆனால் உங்களுக்கு இன்று கொள்கையை விடப் பதவிதானே பெரிது.

சிறுபான்மைத் தமிழர் என்று தங்களைக் கூறிக்கொள்வோரின் உயர்விற்காகப் பாடுபடும் உத்தமத் தோழர் நாங்கள்தானென்று தம்பட்டம் அடித்தீர்களே! அந்த மக்களின் [illegible] தொழிலைப் பறிக்கும் நோக்குடன் மரவரி முறையை ஒழித்துத் தவறணைமுறை கொண்டுவரப் படுவதாகக் கூறி அதைப் பனையடிகளில் எதிர்த்த திருவாளர் சுப்பிரமணியமும், கம்யூனிஸ்டுக் கட்சியும்பாராளுமன்றத்தின் அச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததேன்? மரவரி முறையை நீடியுங்கள் என்று என். எம். பெரேராவிடம் பலமுறை காவடி தூக்கிய ஐக்கிய முன்னணி அரசின் ஒரு அங்கமான உங்களை எட்டி உதைத்தபின் வெட்க

(9ம் பக்கம் பார்க்க)

## பாராட்டுப் பெறும் நடிகமணி வைரமுத்து!

தென்னகத்துப் பெரும் கலைஞர்களுடன் நடிப்பில் ஈடுகொடுக்கக்கூடிய கலைஞர்களை ஈழத்தமிழ்நாடும் பெற்றிருக்கிறது. ஈழத் தமிழ்நாடு, நடிப்புக் கலையில் யாருக்கும் சளைத்ததல்ல என்பதை நிரூபித்துவரும் கலைஞர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்!

அத்தகைய கலைஞர்களில் சிறப்பான தனி இடம்பெற்றவர் நமது நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள்.

சாதாரண ஒரு குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய கலை ஆர்வத்தால் நடிப்புத் துறையில் ஈடுபட்டு முன்னேறி, இன்று ஈழத்தின் தனிப்பெரும் கலைஞராக காட்சி தருகிறார் நடிகமணி வைரமுத்து அவர்கள்.

'மயான காண்டத்தில்' அரிச்சந்திரனாக அவர் தோன்றி நடிக்கும் நடிப்புக்கு இணையாக நடிக்க நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கூட முடியாதென்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

நடிகமணி வைரமுத்துவின் மற்றோர் சிறப்பு யாதெனில் கலைஞனுக்கு ஒரு கொள்கை இருக்கவேண்டுமென்ற கருத்துடையவர் அவர்.

ஈழத்தமிழ் நாட்டின் விடுதலைக்கு போராடி வரும் தந்தை செல்வாவை மிகவும் நேசிப்பவர் நமது நடிகமணி அவர்கள்.

1969ம் ஆண்டு உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மாநாட்டின்போது, நடிகமணியின் நடிப்பு ஆற்றலைக் கண்டு வியந்து, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தம் கையால் நடிகமணிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நடிகமணி அவர்கள், 1953ம் ஆண்டுதான் கலைத்துறையில் முதன் முறையாகப் பிரவேசித்தார். 1953ம் ஆண்டு யாழ் நகர மண்டபத்தில் 'சானா'வின் நெறிப்படுத்தலின்கீழ் நடைபெற்ற தீபாவளிக் கலை விழாவினை காலஞ்சென்ற இலங்கையர்கோனின் உதவியுடன் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தயாரித்தளித்தார். அக்கலைவிழாவில் பங்குபற்றி நடித்த நடிகமணி வைரமுத்துவின் கலை ஆற்றலைக்கண்டு வியந்த பேராசிரியர், அவரது வளர்ச்சியில் ஊக்கமும் அக்கறையும் எடுத்தார். மேலைத்தேசங்களில் வாழும் தமிழ்க் கலையார்வமுள்ளவர்களுக்கெல்லாம் கலைஞர் வைரமுத்துவை அறிமுகப்படுத்தி வைத்து அவரது திறமையை உலகறியவைத்தார்.

1960ம் ஆண்டு கலைஞர் வைரமுத்துவுக்கு 'நடிகமணி' என்னும் சிறப்பு பட்டத்தை கலையரசு சொர்ண லிங்கம் வழங்கினார்.

நடிகமணியின் வெற்றி நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை மயான காண்டம், சத்தியவான்- சாவித்திரி, கோவலன், பூதத்தம்பி, நல்லதங்காள், சாரங்கதாரா ஆகியவையாகும். இந்நாடகங்கள், வானொலியிலும், மேடைகளில் பிரபல்யமுற்று நடிக்கப்பட்டு வருகிறது.

'மயான காண்ட'த்தின் 1000வது நிறைவு விழா 1970ம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கலைக்கழகத்தின் ஆதரவில் கொண்டாடப்பட்டு, நடிகமணிக்கு பொற்கிழியும் வழங்கப்பட்டது.

இப்பொழுது 2000 தடவைகளுக்கு மேலாக மேடையேற்றப்பட்டுள்ள "மயான காண்டம்" இன்று (29.4.72) கொழும்பு சரசுவதி மண்டபத்தில் மீண்டும் மேடையேறுகிறது! நவீனமுறையில் சேவா ஸ்டேஜ் நெறியாளர் கே. எம். வாசகரின் நெறிப்படுத்தலின்கீழ், சின்னையா பாலநாதசிவம் தயாரித்தளிக்கிறார்.

பாராட்டுப் பெறும் நடிகமணி அவர்கள் கலையுலகில் மேலும் ஓங்குபுகழ்பெற்று வாழ்த்துகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறெந்த நாட்டில் இந்த விளையாட்டு

# சிங்களத்தைத் தமிழில் புகுத்தும் சின்னத்தனம்!

ஒரு சிங்களச் சொல்லைத் தமிழில் புகுத்தாமல் தடுப்பதற்கு எவ்வளவு போராட்டம்! தமிழர்கள் அதுவும் அறிஞர்கள்! ஆம் மதியுரைக் குழுவினர் தாம் துரோகிகளா! போராட்டவரலாறைப் படித்துப் பாருங்கள்! இந்த நாட்டில் தமிழ் மொழி படும்பாட்டைச் சிந்தியுங்கள்! அரசாங்கத்தின் அடிவருடிகள்—அரசாங்கத்தின் துதிபாடிப் பிழைக்கும் தமிழ் எழுத்தாளர்கள்—என்ன செய்கிறார்கள்? மதியுரைக் குழுவினர் மதி இழந்த கைப் பொம்மைகளா?

"மகாஜன சம்பத" எனுஞ் சிங்களச் சொல்லினை மகாசன சம்பத்து எனத் தமிழில் வழங்காமல் "மக்கள் செல்வம்" என வழங்கச் செய்தற்காக ஊர்காவற்றுறைப் பா. உ. கா. பொ. இரத்தினம் அரசகரும மொழி ஆணையாளர் திரு. பீற்றர் பி. அபயசேகராவுடன் நடத்திவரும் போராட்டத்தைக் களம் களமாகத்தருகின்றோம்!

20-10-71-ல் திரு: இரத்தினம் பா. உ. அரசகரும மொழி திணைக்கள ஆணையாளருக்கு எழுதியிருந்த கடிதம் வருமாறு:-

''மகாசன சம்பத என்னும் சொற்றொடரை மக்கள் செல்வம் என வழங்கத் தேவையில்லை; அப்படியே தமிழிலும் வழங்கலாம்'' என நீங்கள் ஆலோசனை கூறியதாகத் தேசிய அதிட்டச் சீட்டுச் சபைத் தலைவர் எனக்கு அறிவித்துள்ளார். இந்தச் சிங்களச் சொற்றொடர் குறிப்பெயராகவோ வேறெப் பெயராகவோ இருப்பினும் கருத்து உடையதா, அன்று? எங்கள் மக்களுக்கு இதன் கருத்துப் புலப்படாதா? இதையே தமிழில் வழங்கினால் தமிழ் மக்களுக்கு இதன் கருத்து விளங்குமா? இந்தச் சிங்களச் சொற்றொடரை இவ்வாறே தமிழிலும் எழுதுமாறு நீங்கள் ஆலோசனை கூறும் முன் தமிழ்க் கலைச் சொற் குழுவையோ தமிழுக்குப் பொறுப்பான உதவி ஆணையாளரையோ கலந்து முடிவு செய்தீர்களா? ''வேலியே பயிரை மேய்வது போலத் தமிழைச் சிதைக்கும் பணியைச் செய்வது நிருவாகமுமாகாது; நீதியுமாகாது.

இந்தச் சொல் மட்டுமன்று மாவத்த, போறை, சிறீ லங்கா முதலிய பல சிங்களச் சொற்கள் தமிழிலே அரசாங்கத் திணைக்களங்களாற் புகுத்தப்படுகின்றன. உங்கள் திணைக்களம் இன்று வரை இதைத் தடுத்து நிறுத்த என்ன செய்துள்ளது? என்பதை அறிய விரும்புகிறேன். அரசாங்க வர்த்தமானி முதலியவற்றில் தமிழ் ஒதுக்கப்படுகின்றது. நீங்கள் இவற்றை கவனிப்பதாகத் தெரியவில்லை. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தமிழில் எழுதுபவர்களுக்குத் தமிழில் மறுமொழி அனுப்ப வசதியில்லையென்று மழுப்புகிறது.

''தமிழ்மொழி உரிமையை அழிப்பதற்கே உங்கள் திணைக்களம் பணிபுரிகின்றது?'' என்று தமிழ் மக்கள் கூறுவதையே இந் நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன; தமிழ் மொழி உரிமையைப் பாதுகாக்காவிட்டாலும் தமிழ் மொழியைச் சிதைக்கும் பணியையாகுதல் நீங்கள் செய்யாமல் விட்டால் தமிழ் மக்கள் அமைதியடைவார்கள்;

மேற் கடிதத்துக்கு பதில் வராததால் இது விஷயமாக மீண்டும் நினைவூட்டி 1-11-71-ல் ஒரு தந்தியடித்தார் பண்டிதர்: இதற்குப் பின் 8-11-71-ல் ஆணையாளர் எழுதிய பதில் கடிதம் வருமாறு:-

''மகாஜன சம்பத'' என்னும் இடுகுறிப் பெயரைத் தமிழில் மொழிபெயர்த்தல்.

மேலேயுள்ள விடயம் பற்றிய தங்களுடைய ஒற்ரோபர் மாதம் 20-ஆந் திகதியும் நவம்பர் 1-ம் திகதியும் இடப்பட்ட தந்திகளினதும் ஒற்ரோபர் 20-ம் திகதியிட்ட கடிதத்தினதும் தொடர்பானது.

மேலேயுள்ள விடயத்தின்மீது தமிழ் அரசகரும சொற்றொகுதிச் சொல்லாக்க மதியுரைக் குழுவின் கருத்துரைகளைக் கூறுமாறு நான் வேண்டியிருந்தேன். அவர்கள் கொள்கையளவில் இடுகுறிப் பெயர்கள் மொழி பெயர்க்கப்படலாகாதெனவும், அத்தகைய பெயர்கள் தமிழ் மொழி ஒலியியற் பண்புகளுக்கமைய உருப் பெயர்க்கப்பட வேண்டுமெனவும் சிபாரிசு செய்துள்ளார்கள். இந்தக் குறிப்பிட்ட விடயத்தில் இக் கொள்கைக்குப் பொருத்தமாக ''மகாஜனசம்பத'' என்றபெயர் தமிழில் ''மகாசன சம்பத்து'' என்று உருப்பெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமென்பதே அவர்களுடைய கருத்தாகும்.

நான் இதன்படி உலொத்தர்ச் சபையின் பொது முகாமையாளருக்கு மதியுரை வழங்கியுள்ளேன்.

இதன்பின் 11-11-71-ல் திரு. இரத்தினம் அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளருக்கு பின்வருமாறு தந்தியடித்திருந்தார்.

சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் புலமையுள்ள எவரும் 'மகாஜன சம்பத' என்பதையோ 'மகாஜன சம்பத்து' என்பதையோ இடுகுறிப்பெயர்கள் எனக் கூறமாட்டார்கள் ஜாதிக சம்பத எனும் முன்னைய பெயரை மாற்றிய செயலே இதனை நிறுவும்: காரணம் கருதியே இப்பெயர் மாற்றப்பட்டது. தமிழில் இதனை உருப்பெயர்த்தவர்கள் தமிழ் தெரிந்தவர்களெனின் மகாசன சம்பத்து என்பதை இடுகுறிப் பெயரென்று கூறார்.

சிங்களச் சொற்களையோ, சிங்கள மூலமாகச் சமைக்கிருதச் சொற்களையோ தமிழிற் புகுத்தித் தமிழைச் சிதைக்கச் சூழ்வோரே இடுகுறி எனும் போலிப் போர்வைக்குள் மறைய முயல்வர், இந்தச் சிங்களச் சொல்லின் கருத்திற்கேற்ப இதனைத் தமிழில் மக்கள் செல்வம் என வழங்குதலே தமிழ் மரபுக்கு ஒத்தது.

இதனை இவ்வாறே வழங்குமாறு தேசிய அதிட்டச் சீட்டுச் சபையை வழிப்படுத்துக. அன்றேல் தமிழ் அரசகருமச் சொற்றொகுதி மதியுரைக் குழுவினரைக் கூட்டி இவ் விடயத்தை ஆய்ந்து முடிவு எடுக்கச் செய்க. இம்மதியுரைக்குழுவின் தனிமையை மதிப்பிடுதற்கு உறுப்பினர்களின் பெயர்களை அனுப்பி உதவுக;

திரு. இரத்தினம் மீண்டும் இது சம்பந்தமாக கடுமையான வார்த்தைகளை உபயோகித்து 29-2-72-ல் தந்தி அனுப்பியபின் 11-3-72-ல் ஆணையாளர் அனுப்பிய மறுமொழி வருமாறு:-

''மகாஜன சம்பத'' என்னும் இடுகுறி பெயரைத் தமிழில் மொழிபெயர்த்தல்.

மேலே உள்ள விடயம் சம்பந்தமான 1972 பெப்புருவரி29-ஆம் திகதியிட்ட தங்களுடைய தந்தி தொடர்பாக.

பதிவு அஞ்சலில் தங்களுக்கு அனுப்பப்பட்ட 1971 நவம்பர் 8-ஆந் திகதி இட்ட எனது நூவி.டீ 1/3 இலக்க கடிதத்தை தயவு செய்து பார்க்கவும்;

ஃ

இதற்குப் பதிலளித்து 10-4-72-ல் திரு. இரத்தினம் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

1. சிங்களத்தை தமிழில் மொழிபெயர்த்து என்னைக் குறிப்பிடும்பொழுது சிங்களத்தை நீங்கள் வலிந்து புகுத்தியிருப்பது விநோதமாகவும், வேதனையாகவும் இருக்கிறது. நீங்கள் அனுப்பிய இக் கடிதத்தில் என்னைச் சிங்களத்தில் குறிப்பிட்ட காரணத்தை அறிய விரும்புகிறேன்: இதுவும் ''உருப்பெயர்க்கும்'' வித்தையா என்பதையும், மதிப்புரைக் குப்முபெருமக்களின் கருத்தைத் தழுவியதா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

2 இந்தமாதிரிச் ''சிறு சேட்டைகளால்'' தான் தமிழ் மக்களின் மனம் புண்படுகின்றது. உங்கள் திணைக்களம் மட்டுமன்றி வேறுஞ் சில அலுவலகங்களும் இவ்வாறு தமிழ் மக்களைச் சிறுமைப்படுத்துகின்றன; எனவே; தமிழ் மொழி பெயர்ப்புக்களில் இடப்படும் எண்களில் சிங்களத்தைப் புகுத்த வேண்டாம் என்று எல்லாத் திணைக்களத்தையும் பணித்தற்கு உடனே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிவிக்குக.

3 எனது 11-11-71-ஆம் திகதித் தந்தியில் மதியுரைக்குழு உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்குமாறு கேட்டிருந்தேன் நீங்கள் அறிவிக்கவில்லை. இதனை உடனே கவனிக்குக.

4 எனது 11-11-71-ஆம் திகதித் தந்தியை இம் மதிப்புரைக் குழுவினர்களுக்குச் சமர்ப்பித்து 'மகாசனசம்பத்' எனும் சிங்களச் சொல்லின் மொழி பெயர்ப்பை மீள ஆயுமாறு அவர்களைக் கேட்டு அவர்களின் மீளாய்வு முடிவைத் தெரிவிக்குக;

## அரசியல்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய சபையாக விளங்கும்: இன்றைய உறுப்பினர்கள் தான் தேசிய உறுப்பினர்களாகவும் விளங்குவர். தேசிய சபை தருவதை இப்போதே தராமல் பின்பு தருவோம் என்பது தமிழர்களை ஏமாற்றும் முயற்சியாகும்;

இவற்றை எல்லாம் எதிர்த்து தமிழ் பா: உ.க்கள் சில திருத்தங்கள் சமர்ப்பித்தார்கள். அரசியல் நிர்ணய சபையில் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை; இச்சந்தர்ப்பத்தில் வல்வெட்டித்துறை மக்களாகிய நாம் தமிழ் தலைமைப்பீட தமிழ் மக்களின் அரசியற் கட்சிகளை ஓர் கொள்கையின்கீழ் இணைத்து தமிழினத்தின் சார்பில் முயன்றோம்: அதன் பலனாக தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ், சுயாட்சி, ஈழத் தமிழர் முன்னணி ஆகிய கட்சிகளின் சார்பாக ஈழம் வாழ் தமிழர்களின் குறைக்கமுடியாத குறைந்த பட்சக் கோரிக்கை என்று ஒன்பது அம்ச கோரிக்கை என பிரகடனப்படுத்தி அரசியல் சபைக்கு அனுப்பினோம். ஈற்றில் தமிழ் மக்கள் ஏகோபித்த கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டன.

ஆகவே தமிழ்பா.உ.களாக இருக்கும் தங்களை தமிழினத்தின் மீளா அடிமையாக்கும் சட்டங்கள் அடங்கிய அரசியற் திட்டத்தை நிராகரிப்பதோடு இவ் அடிமை சாசனத்தில் கையொப்பமிடாது தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்பை அரசினர்க்கும் உலகத்துக்கும் காட்டுமாறு வல்வை மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.''

—இவ்வாறு வல்வை சனசமூக சேவா நிலையம் ... தமிழ் பாராளுமன்ற ... பினர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## எத்தனை காலம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்றி அரசாங்கத்தில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கிறீர்களே! எதற்காக? பதவிக்காக!

தீண்டாமையை மட்டுமல்ல சாதிகளையும் ஒழிக்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையில் திருத்தப் பிரேரணை கொண்டுவந்த பொழுது தீண்டாத மக்களின் பிரதிநிதியென்றும், பாதுகாவலரென்றும் கூறிக்கொள்ளும் சுப்பிரமணியமும் கொம்யூனிஸ்டுகளும் எதிர்த்ததேன்? சாதி ஒழிக்கப்பட்டால் தீண்டாத மக்களென்று ஒருவரும் இருக்கமாட்டார்களே அதன் பிறகு அம்மக்களிடம் உங்கள் செல்வாக்கு அற்றுப் போகுமென்ற அச்சத்தினாலா? சாதியின் பெயரால் சுரண்டி வாழமுடியாதென்ற கவலையினாலா?

ஐயா தோழர்களே இன்னும் எத்தனை காலத்திற்குத் தான் தமிழினத்தை ஏமாற்றலாம் என்று எண்ணுகிறீர்கள்: காட்டிக்கொடுக்கும் உங்கள் துரோக வாழ்வை நிறுத்திக்கொள்ளுங்கள். இன்றேல் விடுதலை வேட்கை கொண்ட தமிழினத்தின் சுதந்திரத் தீ உங்களைச் சுட்டெரித்துவிடும்.

## ஒரு மனிதன் இரு உலகம்

முதல் தடவையாக பதினறு பெண்கள் ஒன்று சேர்ந்து நடிக்கும் 'ஒரு மனிதன் இரு உலகம்' என்ற நாடகம் இம்மாதம் 30ந் திகதி மாலை 6.30 மணிக்கு லயனல் வெண்ட் தியேட்டரில் மேடையேறவிருக்கிறது. இலங்கை தேசிய கலா நிலையத்தின் சார்பில் திரைப்பட நடிகர் டீன்குமார் தயாரித்துள்ள இந்நாடகத்தை பிரபல கலைஞரான கலைச்செல்வன் கதை—வசனம் எழுதி டைரக்ட் செய்துள்ளார்.

ஈழத்து தமிழ்த்திரை நட்சத்திரங்களான ஏ. எஸ்: ராஜா, இந்திராதேவி ஆகியோருடன் சிங்களத்திரை நட்சத்திரங்களான டீன்குமார், பரீனா-லை—ஸ்ரீயாணி, ஷிலா மதுரங்கி, ரெஜினா, முன்னணி மேடை நடிகர்களான கே. வி. எஸ். மணியம், பிரேம்நஷ்லி, குமாரி ரோஹினி, மாஸ்டர் ரவிச்சந்திரன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கவிருக்கின்றனர்.

இந்நாடகத்திற்காக இலங்கை தேசிய கலா நிலையம் வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு கலையரசு. க. சொர்ணலிங்கம் அவர்கள் அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச்செய்தியில், 'இதே மன்றத்தாரினதும், இயக்குநரினதுமான நாடகங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். அவை ஒவ்வொன்றும் நாடக இலக்கணங்களுக்கும், இலட்சியங்களுக்கும் ஏற்ப அமையப்பெற்று, ஒழுங்கும், ஒழுக்கமும் நிலவ நடாத்தப்பெற்றதைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். இந் நாடகமும் அவைபோல் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை'—எனக்குறிப்பிட்டுள்ளார்.



இம்மாதம் 30ந் திகதி மாலை 6-30 மணிக்கு லயனல் வென்ட் தியேட்டரில் மேடையேறவிருக்கும் 'ஒரு மனிதன் இரு உலகம்' நாடகத்தில் டீன்குமார்—குமாரி ரோஹினி தோன்றும் ஒரு கட்டம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரை விருந்து

3வது வாரமாக காட்சியளிக்கிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) - பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி, லட்சுமி, முத்துராமன், நிர்மலா
நாகேஷ், குமாரி சச்சு, நம்பியார்

—நடித்த—

## தங்கைக்காக

இப்பொழுது

காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி (கொழும்பு) லிடோ (யாழ்நகர்)

விஜயா (மட்டுநகர்)

ஜெய்சங்கர் பாரதி மனோகர்

—நடித்த—

## நான்கு கில்லாடிகள்

---

3வது வாரம் செல்லமகால் (கோட்டாஞ்சேனை) ஸ்ரீமுருகன் (வவுனியா) இம்பீரியல் (மட்டுநகர்)

ஜெமினி கணேசன், ராஜஸ்ரீ, நாகேஷ் பேபி ராஜி நடித்த

கெபிட்டி
3வது மாதம்
கண்ணே
பாப்பா



## பத்தாம் பசலி

கதை—வசனம்— டைரக்ஷன்:— கே. பாலசந்தர்.

---

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கிறது



2வது மாதம் சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ரங்கராவ்,
ஜெயலலிதா, நாகையா,
பாலாஜி, ராகவன்,
சந்திரபாபு, பண்டரிபாய்,
சுந்தரராஜன், மனோகர்,

நடிக்கும்

சுஜாத்தாவின்

## ராஜா

(ஈஸ்ட்மன் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194ஏ, இலக்கத்தில்